பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 281 ஆவணி 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

### உழவியந்திரத்தில் நசியுண்டு சாரதி சாவு

முல்லைத்தீவு, செப். 6
முல்லைத்தீவு பாலி ஆற்றுப் பகுதியில் மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் விபத்துக்

05

## அரச தலைவர் தேர்தலில் சு.க. தனித்து போட்டியிடும்

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பினார் தயாசிறி

கொழும்பு, செப்.6
அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வேட்பாளர் ஒருவரை களமிறக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி

06

### வேட்பாளர் முக்கியமல்ல எல்பிட்டிய தேர்தலே முக்கியம்

கூறுகிறார் ரணில்

கொழும்பு, செப். 6
அரசதலைவர் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் பிறகு கலந்தாலோசிக்கலாம். அதற்கு முன்னர் எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் கவனம் செலுத்துமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கி

03

### குண்டுதாரிகளை விட்டு விட்டு கோத்தாவை குடைகிறது சி.ஐ.டி.

சீறுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 6
உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் கவனம் செலுத்தாமல், கோத்தபாய ராஜபக்சவின் மீதே குற்ற விசாரணைத் திணைக்களம் கவனம் செலுத்திக் கொண்டிருக்

23

### பௌத்தத்தை வலுப்படுத்துவேன்

## முப்படையினரும் சுயாதீனமாக இயங்க அனுமதி வழங்குவேன்

### ரணிலின் தடையை மீறி குருநாகலில் நடந்த கூட்டத்தில் சஜித் சூளுரை

கொழும்பு, செப்ரெம்பர் 6
30 ஆண்டு காலப் போரை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை துப்புரவுத் தொழிலாளர்களாக மாற்றியது யார்? கடந்த கால ஆட்சியிலேயே இது நடந்தது. எதிர்காலத்தில் அவர்களுக்குரிய மரியாதையை வழங்கி, முப்படையினரும் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிப்பேன். எதிர்வரும் 4 ஆண்டுகளில் ஆயிரத்து 125 பௌத்த வாரத்தை நடைமுறைப்படுத்தி பௌத்த மதத்தை வலுப்படுத்துவேன். இவ்வாறு அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று கருதப்படும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

23

### அடிக்கல் நடும் நிகழ்வுக்கு உபசரணைச்செலவு 27 இலட்சம் ரூபா

யாழ். மாநகர சபை அனுமதி

03

### பலாலி வானூர்த்தித் தள வேலை வாய்ப்புக்களில் இங்குள்ளோருக்கு முன்னுரிமை

அமைச்சர் ரணதுங்க உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், செப். 6
பலாலி பன்னாட்டு வானூர்தித் தளத்தின் வேலை வாய்ப்புக்களில் யாழ்ப்பாணத்தவர்களுக்கும், வடக்கு மாகாணத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்று அமைச்சர் அர்ஜீன ரணதுங்க தெரிவித்தார்.

23

### மீண்டும் தலைதூக்கும் வாள்வெட்டுக் குழுக்கள்

யாழ்ப்பாணம், செப். 6
கோண்டாவில் அன்னங்கை பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த கும்பல் வீட்டில் இருந்த பொருள்களை

04

### சுகாதாரப் பணி உதவியாளர் நியமனம் வழங்கல் நிறுத்தம்

- ★ கலகமடக்கும் பொலிஸ் குவிப்பு
- ★ நகரசபைச் சொத்துக்கள் சேதம்
- ★ ஆளுநர் இன்று சிறப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 6
வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் சுகாதாரத் தொண்டர்க

04

### இந்தியாவுக்கு அதிகளவானோர் பயணிக்க விரும்புகின்ற வானூர்தி தளத்துக்கு பலாலியிலிருந்து சேவை

அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6
பலாலி - சென்னை இடையே வானூர்திச் சேவை இடம்பெறுமா என்பது தொடர்பில் உறுதியான பதிலை வழங்காத சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜீன ரணதுங்க, இந்தியாவில் எந்த வானூர்தி

04

### போராட்டத்தின்போது மண்ணெண்ணெயை தலையில் ஊற்றிய சுகாதாரத் தொண்டர்

மாவை. எம்.பி. முன்பாகச் சம்பவம்



யாழ்ப்பாணம், செப். 6
வடக்கு சுகாதாரப் பணி உதவியாளர் நியமனம் வழங்கும் விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின்போது, சுகாதாரத் தொண்டர் ஒருவர் மண்ணெண்ணெயை தலையில் ஊற்றியதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. போராட்டத்

03



DFCC தங்கவரம்

வட்டி வீதத்தை குறைத்துள்ளோம்
கடன் தொகையை மேலும் மேலும் அதிகரித்துள்ளோம்!

கரட் 24
ரூ. 50,000/-

கரட் 22
ரூ. 46,000/-

மாதாந்த வட்டி 1.4%

அடகுச் சேவைக்காக நீங்களும் அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு வாருங்கள்

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# செப்ரெம்பர் மாத ராசிபலன்



ரிஷபம் 2019

## இடபம்

### உற்சாகம் தரும் மாதம்

செப்ரெம்பர் மாதத்தில் சூரியன் சிம்ம மாதத்திலும் கன்னி மாதத்திலும் சஞ்சரிக்கிறார். மாத முற்பகுதியில் சிம்ம ராசியில் சூரியன், சுக்கிரன், செவ்வாய், புதன், மிதுனத்தில் ராகு, விருச்சிகத்தில் குரு, தனுசு ராசியில் சனி,கேது என கிரகங்கள் சஞ்சாரம் உள்ளது. மாத பிற்பகுதியில் கன்னியில் கிரகங்கள் கூட்டணி அமைக்கின்றன.

இந்தக் கிரகங்கள் நான்கில் இணைவது யோகம். மிகப்பெரிய யோகத்தை தரும். சூரியனால் வீடு ,வண்டி வாகனம் வாங்கலாம். செவ்வாய் பூமி காரகன். களத்திர காரகன் நன்மையைச் செய்வார். கெட்டி மேளச்சத்தம் கேட்கும் இந்த மாதம் திருமணம் கை கூடி வரும். கணவன்- மனைவி இடையே நெருக்கமான உறவை ஏற்படுத்தும். காதல், திருமணம், வாழ்க்கை உற்சாகத்தை ஏற்படுத்தும். எதிர்பார்க்காத ஆசைகளை நிறைவேற்றுவார் சுக்கிரன். புதன் பணப்பிரச்சினையைத் தீர்ப்பார். திறமை ,வித்தை புகழை அறிய வைப்பார். கல்வி திறமையை வெளிப்படுத்துவார். 10ஆம் திகதி சுக்கிரன் கன்னி வீட்டில் நீசமடைகிறார். 11ஆம் திகதி புதன் ஆட்சி உச்சமடைகிறார். ரிஷப ராசி லக்னத்தில் பிறந்தவர்களுக்கு நன்மையைத் தரும். ராஜயோகம் மாதம் அற்புதம். 5ஆம் வீட்டில் கோள்கள் வலிமை பெறுகிறது. வேலையில் புதன் சுக்கிரன் உற்சாகத்தை கொடுத்து வெல்லும் தைரியத்தை தருவார். சண்டை சச்சரவுகள் மறையும். கணவன் - மனைவி இடையே உற்சாகமான புரிதல் வரும். சூரியன் செவ்வாய் 17ஆம் திகதி வரை 4ஆம் வீட்டில் இருப்பதால் இடம் வாங்கலாம். சொத்துக்கள் வாங்கலாம். திறமையை வெளிக்காட்டும் யோகம் தரும் காலம்.



சனியும், கேதுவும் ஒன்றாக சந்திக்கும் காலம் தொழிலில் தொல்லை இடையூறுகளை ஏற்படுத்தும். சனியால் தடை ஏற்பட்டாலும் அந்தத் தடைகளை உடைத்து முன்னேறுவீர்கள். செப்ரெம்பர் மாதம் இடப ராசிக்காரர்களுக்கு உற்சாகமான மாதமாகும்.

# 12 ராசிக்காரர்களும் விநாயகரை வழிபடும் முறை?

உலகத்தில் அதிகமான நாடுகளில் அதிகமான மக்கள் வணங்கும் தெய்வங்களில் விநாயகருக்கு ஓர் இடம் உண்டு. சைவம், வைணவம் இரு சமயத்தவர்களுக்கும் பொதுவான கடவுள் விநாயகர். சைவத்தில் சக்தியின் மைந்தனாக, முருகனின் தமையனாக இருப்பவர், வைணவத்தில் தும்பிக்கையானாக வணங்கப்படுகிறார். சாதாரண களிமண்ணில் அவரை யார் வேண்டுமானாலும் செய்து வணங்கி, மீண்டும் மண்ணிலேயே சேர்க்கிறோம். அண்டத்தில் உள்ளது பிண்டத்தில், பிண்டத்தில் உள்ளது அண்டத்தில்' எனும் ஆன்மிகத் தத்துவத்தை அகிலத்துக்கு உணர்த்தியவர் விநாயகர்.

ஜோதிட சாஸ்திரத்தில் ராகு,கேது ஆகிய கிரகங்கள்தான் மனித வாழ்வைத் தீர்மானிக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன. இவற்றால் பாதிக்கப்படுபவர்கள் முதலில் வணங்க வேண்டிய தெய்வம் விநாயகர்தான். 12 ராசிக்காரர்களும் விநாயகரை எப்படி வணங்க வேண்டும் என்பது பற்றிப் பார்ப்போம்.



**மேடம்**

மேட ராசிக்காரர்களுக்கு 9ஆம் வீட்டில் இருக்கும் சனி பகவான் திருக்கணிதப் பஞ்சாங்கப்படி, பத்தாம் இடத்துக்கு வரப்போகிறார். பத்தில் சனி வந்தால், 'பதி குழைந்து வறுமை காட்டும்' எனச் சொல்வார்கள். ஆனால், அது குறித்து நீங்கள் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை. வீட்டுக்கு அருகில் உள்ள விநாயகரை ஒன்பது சனிக்கிழமை வணங்கி வந்தால் போதும். உங்களின் எல்லா கஷ்டங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடும். விநாயகர் தொழில் விருத்தியைக் கொடுத்து வாழ்க்கை வளங்களை வாரி வழங்குவார்.

**இடபம்**

இடப ராசிக்காரர்களுக்கு 8ஆம் வீட்டில் இருக்கும் திருக்கணிதப் பஞ்சாங்கப்படி, சனி பகவான் ஒன்பதாமிடத்துக்கு வரப்போகிறார். சப்தம ஸ்தானம் எனும் 7ஆம் வீட்டில் இருக்கும் குரு பகவான் 8ஆம் வீட்டுக்கு வரப்போகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வியாழக்கிழமை தோறும் விநாயகரை வழிபட்டு, சதுர்த்தி நாளில் மஞ்சள் ஆடை அணிவித்து வழிபட்டால், மனதில் தெம்பும் நம்பிக்கையும் பெற்று எல்லாவகையிலும் வெற்றியாக உங்களுக்கு அமையும். (தொடரும்)



# இன்றைய நாள்

**மேடம்:** சிலர் உங்களுக்கு தவறான ஆலோசனை சொல்வர். அவப்பெயர் வராத வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டு.

**இடபம்:** செயல்கள் வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உதவியை மனமுவந்து வழங்குவர். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மிதுனம்:** நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். வாழ்வில் எதிர்கொண்ட சிரமங்களை பற்றிய சிந்தனை குறையும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சுமாராக இருக்கும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும்.

**சிம்மம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். இதனால் சிறு வேலைகளை நினைவுபடுத்தி நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** சாந்தகுணத்துடன் பேசுவீர்கள். செயல்களில் வெற்றி அதிகரிக்கும். தொழில், வியாபா ரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** உங்கள் குடும்பத்தேவை அதிகரிக்கும். மற்றவரை நம்பி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும்.

**விருச்சிகம்:** உங்களின் பேச்சில் மங்கலம் நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறுவர். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். அதிக பணவரவில் சேமிப்பு கூடும்.

**தனுசு:** சிரமங்களை தாமதமின்றி சரி செய்யவும். நல்லவர்களின் ஆலோசனை நம்பிக்கைதரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். அதிக உழைப்பினால் பணவரவு சீராகும்.

**மகரம்:** பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** வாழ்வில் இருந்த குறுக்கீடு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். அரசியல்வாதிகளுக்கு விவகாரங்களில் அனுகூலத் தீர்வு வந்து சேரும்.

**மீனம்:** இன்று பரிகாசத்துடன் பேசுபவரிடம் விலகி சுயகௌரவம் பாதுகாத்திடுங்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.




AC பஸ்ல யாரையாவது ஏத்தி விட்டா....
'டாட்டா' கூட காட்டமுடியல

ஒரு வரியில் வரும் பதில்கள் அனைத்தும் விரக்தியின் வெளிப்பாடே..!

மனதில் வெறுப்பை வளர்ப்பது விஷத்தை தான் அருந்திவிட்டு அடுத்தவன் சாக காத்திருப்பதைப் போன்றது.




## பிக்பாஸ் 3






## பேசாதே பேசாதே....

1. ஏழைக்கு முன்னால் நின்று கொண்டு உனது செல்வம் பற்றிப் பேசாதே
2. நோயாளிக்கு முன் நின்று கொண்டு ஆரோக்கியத்தைப் பற்றி பேசாதே
3. பலவீனமானவனுக்கு முன்னால் நின்று கொண்டு உனது பலம் பற்றிப் பேசாதே
4. மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன்னிருந்து கொண்டு சந்தோசம் பற்றி பேசாதே
5. சிறைக்கைதிக்கு முன் நின்றிருந்து உன் சுதந்திரம் பற்றிப் பேசாதே
6. குழந்தைப் பாக்கியமற்றவனுக்கு முன் நின்று கொண்டு குழந்தையைப் பற்றி பேசாதே
7. அநாதைக்கு முன் நின்று கொண்டு உனது தந்தையைப் பற்றிப் பேசாதே

# தொடர்ச்சிகள்....

### உபசரணைச்...

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வுக்கான உபசரணைச் செலவான ரூபா 27 லட்சத்துக்கான அனுமதியை நீண்ட வாய்த் தர்க்கத்தின் பின்னர் வழங்கியது.

'2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில், யாழ்ப் பாணம் மாநகர சபையின் புதிய கட்டடத்துக்கான அடிக் கல் நடும் நிகழ்வு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள் ளது. இந்த நிகழ்வில் 2 ஆயிரத்து 200 பேர் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற் கா்ன வரவேற்பு, உணவு மற்றும் மண்டப செலவுக்காக 2.7 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது. இதற்கான நிதியை மாநகர சபையே வழங்க வேண்டும். இதற்கு சபை அனுமதி வழங்கவேண்டும்' என்று மாநகர முதல்வர் ஆனோல்ட், மாநகர சபையின் நேற்றைய அமர்வில் கோரிக்கை முன்வைத்தார்.

திட்டத்தை வரவேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் உறுப்பினர் பார்த்தீபன், இது நிகழ்வுடன் முடிந்து விடுமா? அல்லது கட்டி முடிக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார். நிகழ்வுக்கான செலவுகளுக்கு கூறுவிலை கோரப்பட்டதா? இவ்வளவு பணம் எதற்காக செலவு செய் யப்படுகின்றது? இதன் விவரங்கள் என்ன என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குரிய பதிலை முதல்வர், செயலர் ஊடாக வழங்கி னார். இந்தத் திட்டம் ஆரம்ப நிகழ்வோடு மாத்திரம் நிற்கு மானால் இந்த நிதியை வழங்க முடியாது என்று முன் னணி உறுப்பினர்கள் கூறினர்.

'பல ஆயிரம் மில்லியன் ரூபா செலவுள்ள திட்டத்துக்கு வெறும் உபசரணைச் செலவை மட்டும் கோரும் நிலை யில், வடை என்ன விலை? சாப்பாடு உண்டா? இல் லையா என்று கேள்வி எழுப்புவது தமிழர்களின் கலாசார மான விருந்தோம்பலுக்கே அவமானம். எனவே இதனை அனுமதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் செல்வவடிவேல் தெரிவித்தார்.

இதன் பின்னர் நிதியை வழங்க அனுமதி வழங்கப்பட் டது. (ஒ.5,105)

### போராட்டத்தின்...

தில் ஈடுபட்டிருந்த ஏனையோர் அவரது கையிலிருந்து மண்ணெண்ணைப் போத்தலைப் பறித்து எடுத்ததுடன், அவரையும் பிடித்து அமைதிப்படுத்தினர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றவர்களில் 454 பேருக்கு நிரந்தர நியமனம் நேற்று வழங்க ஏற்பாடாகி யிருந்தது. சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் நிகழ்வு நடைபெற இருந்தது.

நீண்டகாலம் பணியாற்றியும் தாம் நியமனத்தில் உள் வாங்கப்படவில்லை எனத் தெரிவித்து சுகாதாரத் தொண் டர்கள் நேற்றுமுன்தினமும் போராட்டத்தில் ஈடுபட்டிருந் தனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்க நேற்று ஏற்பாடாகியிருந்தது. நிரந்த நியமனத்துக்கு உள்வாங்கப்படாத சுகாதாரத் தொண்டர் கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதி ராசா போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்தி னார்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் திடீரென, தலையில் மண்ணெணெயை ஊற்றினார். உடனே அங்கிருந்தவர் கள் அவரது கையிலிருந்து போத்தலைப் பறித்தனர். அவரை அழைத்துச் சென்று சமாதானப்படுத்தினர். இத னால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. (ஒ.5)

### வேட்பாளர்... .

யுள்ளார்.

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மாலைதீவுப் பயணத் தின் போதும் அவதானத்தில் கொண்டிருந்தார். மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்தனவு டன் அங்கிருந்தவாறே தொடர்பு கொண்டிருந்தார். நாடு திரும்பியவுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பெந்தர மற்றும் எல்பிடிய தொகுதி அமைப்பாளர் அமைச்சர் கயந்த கரு ணாதிலகவுடன் ரணில் கலந்துரையாடினார்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபிர் ஹசிம், கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரிய வசம் உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பி னர்கள் அலரி மாளிகையில் எல்பிட்டிய தேர்தல் குறித்து நேற்றுக் கலந்துரையாடினர். இதன்போதே மேற்கண்ட வாறு ரணில் ஆலோசனை வழங்கினார். (ஒ.5)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 11.04.1933 — இறப்பு 04.09.2019

அமரர்

**வல்லிபுரம் குமாரசாமி**

(ஓய்வு பெற்ற எழுதுனர், மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்.)

கைதடி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் **திரு.கு. கோகுலன்** அவர்களின் பாசமிகு தந்தைஅவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம் சமூகம், கமநல அபிவிருத்தித்திணைக்களம், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

**விசுவநாதன் சிற்றம்பலம் (பெருமாள்)**

(முன்னாள் முகவர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதன் சிற்றம்பலம் 05.09.2019 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதன் - கைலாயபதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்தாபிள்ளை - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் இரத்தினேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், அராலி கிழக்கு அ.மி.த.க .பாடசாலை) அன்புக் கணவரும் ஹாரிணியின் (மாணவி SLIIT) பாசமிகு தந்தையும் அம்பலவாணரின் (இளைப்பாறிய உப அதிபர், யா/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்) பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான விஜயலக்ஷ்மி, கணபதிப்பிள்ளை, தையல்நாயகம் மற்றும் சுந்தரம் பிள்ளை தெட்சணாமூர்த்தி, அமராவதிப்பிள்ளை, ஞானாம்பிகை, வேலுப்பிள்ளை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் கோமளம் (ஓய்வுநிலை அதிபர், யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்), தங்கபூலோக புவனேஸ்வரி (பவளம்), தில்லைநடராஜா (ஓய்வுநிலை கிராம சேவையாளர்), சற்குணநாதன் (அவுஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிருந்தா (வைத்தியர் - LRH பொறளை), சுகந்தா (கால்நடை வைத்தியர், இரத்மலானை), ஜெயந்தா (பொறியியலாளர் (RDA), பத்தரமுல்லை) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும் சிவகாந்தன் (பொறியியலாளர், பியகம), விஷ்ணுகுமார் (பொறியியலாளர், கொழும்பு), சிவானந்தன் (பொறியியலாளர், இராஜகிரிய) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுயன், லக்ஷன், ஜெய்ஷன், சீத்தானி, நதினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2019) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அராலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலிதெற்கிலுள்ள பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மகள், சகோதரர்
077 476 6806, 0766688491

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 22.05.1936 — மறைவு 03.09.2019



**திரு. முத்துத்தம்பி விநாயகமூர்த்தி**

(ஓய்வு நிலை தலைமைக்காசாளர் - மகாராஜா நிறுவனம் - கொழும்பு)

தெல்லிப்பழை வருத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு -05 தற்போது நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி அவர்கள் 03.09.2019 செவ்வாய்கிழமை அன்று காலமானார். அன்னார் திருவோணம் விநாயகமூர்த்தி (ஓய்வு நிலை போதனாசிரியர், தாதியர் பாடசாலை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முத்துத்தம்பி, சிவஞானவதி அம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, இரத்தினம்மா தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமநாதன் அவர்களது சகோதரரும் ஆவார். அன்னார் மயூரன், ஆரூரன்(Aus) ஆகியோரின் அன்புத்தந்தையும், பிரேமளா, சுகேந்தினி (Aus) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணன், யதுரன், அகரன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் (கல்கிசை) 07.09.2019 அன்று பிற்பகல் 03.00 மணி தொடக்கம் 06.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 08.09.2019 ஞாயிறு அன்று காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிச்சடங்குகள் பிற்பகல் 2.30 மணியளவில் மகிந்த மலர்ச்சாலையில் (கல்கிசை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 4.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்

திருவோணம் (மனைவி)– 0112581219 , மயூரன் (மகன்) – +61423527122, ஆரூரன் (மகன்) – +61400355128

### சுகாதாரப்...

ளாகப் பணியாற்றியவர்களில் 454 பேருக்கு நேற்று சுகாதாரப் பணி உதவியாளர் நியமனம் வழங்கப்பட இருந்தது. இந்த நிலையில், நியமனம் கிடைக்காதோரின் போராட்டத்தையடுத்து நியமனம் வழங்கும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது. நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் போராட்டக்காரர்கள் ஆட்சேபனை எழுப்பியிருந்த நிலையில் இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் சிறப்புக் கலந்துரையாடல் இன்று நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய ஆயிரத்து 676 பேரும், மருத்துவமனைகளில் நிலவி வந்த ஆண் ஊழியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும், செயற்கை அவயங்கள் தயாரிக்கும் அலகின் தேவைக்காகவும் வெளிவாரி அடிப்படையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக சேவைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட 136 பேரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் மருத்துவமனைகளில் காணப்படும் தேவைகளைக் கருத்தில் கொண்டு மொத்த வெற்றிடமான 454 இல் 30 சதவீதம் ஆண்களை ஆள் சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆளுநரின் சிறப்பு அனுமதிக்கு அமைவாக, தரம் 8 கல்விச் சித்தி இதில் கவனத்தில் கொள்ளப்பட்டது. உச்ச வயது எல்லையாக 50 அனுமதிக்கப்பட்டது. மொத்த வெற்றிடத்தில் 3 சதவீதம் மாற்றுதிறனாளிகளுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் உண்மைத் தன்மை அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டன.

சுகாதாரத் தொண்டர் அல்லது வெளிவாரி அடிப்படையில் சேவை புரிந்த காலப் பகுதியின் ஆண்டு ஒன்றுக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 55 புள்ளிகளும், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு ஆகக் கூடியது 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையின்போது தோற்றுகின்ற பரீட்சார்த்திகளின் செயலாற்றுகைக்காக 5 புள்ளிகளுமாக 100 புள்ளிகள் வழங்குவதான புள்ளியிடல் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்பட்டு உயர்ப்படி ஒழுங்கில் பொதுவான பட்டியல் தயாரிக்கப்பட்டு, சுகாதாரப் பணி உதவியாளர் பதவிக்கு பொருத்தமான 454 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 23 மாற்றுத் திறனாளிகளும், 8 பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். நியமனத்துக்குத் தெரிவானவர்களின் பெயர்ப் பட்டியல் கடந்த 3ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதனையடுத்து, நியமனம் கிடைக்காத பலரும் சுகாதார அமைச்சுக்குப் படையெடுத்திருந்தனர். அவர்களுக்கு புள்ளிப் பட்டியல் காண்பிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிலையில் நியமனம் கிடைக்காதோர் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிரந்தர நியமனத்தில் உள்வாங்கப்பட்டோரில் பலர் தகுதியில்லாதவர்கள் உள்ளடங்கியுள்ளனர் என்றும், தகுதியான தாம் உள்வாங்கப்படவில்லை என்றும் குற்றம் சுமத்தியிருந்தனர். சுகாதாரப் பணி உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டோருக்கு சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் வைத்து நேற்று நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து நேற்றுக் காலையிலேயே அங்கு சென்ற, நியமனம் கிடைக்காத தொண்டர்கள் வாசலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மண்டபத்தின் கதவுகளையும் பூட்டினர். இதனால் சச்சரவான நிலைமை அங்கு ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நகர சபையின் சொத்துக்களையும் சேதப்படுத்தினர். அங்கு பெரும் பதற்றமான நிலமை ஏற்பட்டதையடுத்து, கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்,

இதற்கிடையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில், மாவட்டத்துக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் 5பேர் ஆளுநர் ராகவனைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். ஆளுநர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய அனைவரினதும் புள்ளிப் பட்டியலை வழங்குவதாகவும் அதனைப் பார்வையிட்டு அதிலுள்ள குறைபாடுகள், முறைப்பாடுகள் தொடர்பில் நாளை (இன்று) காலை 11 மணிக்கு இடம்பெறும் கூட்டத்தில் சமர்பிக்குமாறும் ஆளுநர் கூறினார். இன்று காலை இடம்பெறும் கூட்டத்தில் 5 மாவட்டங்களில் நேர்முகத் தேர்வு நடத்திய அதிகாரிகளும் பங்கேற்பார்கள். அவர்களிடம் போராட்டக்காரர்கள் தமது முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். இதன்போது, ஏதாவது அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது சரிசெய்யப்படும் என்றும், இல்லாவிடின் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும் ஆளுநர் போராட்டக்காரர்களிடம் கூறியுள்ளார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

**முத்துக்குமாரு பரமேஸ்வரி**



தோற்றம் 10.02.1936 — மறைவு 01.09.2019

வேலணையை பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பரமேஸ்வரி கடந்த (01.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர் வரும் (08.09.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS27798(16/17)

904/5 K.K.S வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தகவல் -குடும்பத்தினர் 077 270 8485

### பயணிக்க...

நிலையத்துக்கு அதிகளவான பயணிகள் பலாலியிலிருந்து பயணிக்க விரும்புகின்றனரோ, அந்த வானூர்தி நிலையத்துக்கு பலாலியிலிருந்து வானூர்திச் சேவை இடம்பெறும் என்று தெரிவித்தார்.

பலாலி வானூர்தி நிலையம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு திறக்கப்படவுள்ளது. பலாலி வானூர்தி நிலையத்தில் 'டியூட்டி பிறீ சொப்' அமைக்கப்படவுள்ளது. அதில்வர்த்தகநிலையங்களை அமைப்பதற்கு உள்ளூர் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களை அறிவூட்டும் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அமைச்சர் ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கு மக்கள் பலாலியிலிருந்து சென்னைக்குச் செல்வதையே அதிகம் விரும்புகின்றார்கள். திருச்சி வானூர்தி நிலையத்தை விடவும் சென்னை வானூர்தி நிலையத்தையே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், பலாலியிலிருந்து சென்னைக்கு வானூர்திச் சேவைகள் இடம்பெறாது என்று செய்திகள் வெளிவருகின்றன. சென்னைக்கு வானூர்திச் சேவை நடத்தப்பட வேண்டும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பலாலியிலிருந்து இந்தியாவின் எந்த வானூர்தித் தளத்துக்கு அதிகளவான பயணிகள் பயணிக்க விரும்புகின்றனரோ அந்த வானூர்தித் தளத்துக்கு சேவைகளை முன்னெடுக்க முடியும் -என்றார். (ஒ.5,105)

### மீண்டும்...

அடித்து நொருக்கியதுடன் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் இரண்டு உந்துருளிகளில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவே வன்முறையில் ஈடுபட்டது என்றும் குறித்த நால்வரும் தமது முகங்களை மூடி கட்டி இருந்தார்கள் என வீட்டில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

வீட்டினுள் புகுந்து வன்முறை கும்பல் அடாவடியில் ஈடுபட்டிருந்த வேளை வீட்டில் இருந்தவர்கள் அவலக் குரல் எழுப்பிய போது அவர்களை வாளைக் காட்டி மிரட்டியதாகவும், அவல குரல் கேட்டு உதவிக்கு வந்த அயலவர்களையும் வாள்களைக் காட்டி மிரட்டி விட்டு அக்கும்பல் அங்கிருந்து தப்பி சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேசத்திலும் மூன்று தினங்களுக்கு முன்னர் வாள்வெட்டுக் குழுக்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5,37,106,ரி1)

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் :- சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன்**
**முகவரி :- டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்துக்கு உட்பட்ட வட்டாரம் - 14. வங்களா ஒழுங்கை ஆதன இலக்கம் 16 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி முத்துப்பிள்ளை சரவணமுத்து என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது 1917 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சரவணமுத்து சபாபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 9518 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் முருகேசு பெண் ஆச்சிக்குட்டிக்கு சீதனமாக வழங்கப்பட்டது. இவர்கள் இருவரும் இறக்க இவர்களின் பிள்ளைகளான முருகேசு வல்லிபுரம். சரவணமுத்து முத்துப்பிள்ளை. முருகேசு கதிரவேலு ஆகியோரில் முருகேசு கதிரவேலுவின் பிள்ளைகளான கதிரவேலு சந்திரபோஸ். கதிரவேலு நந்தகுமார். கதிரவேலு நாகரத்தினம். தவராஜசிங்கம் ரோகினி ஆகிய நால்வரும் 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் முகதாவில் நிறைவேறிய 1113 ஆம் இலக்க உறுதியின் மூலம் சந்திரபோஸ் தமிழ்ச்செல்வனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விவரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையும் கொட்டைக்காடு நிலப்பரப்பு 01 குழி 7.28 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் வரைந்த வரைபட இல 3552/ 03.02.2013 இன்படி துண்டு - 01 ஆகக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குழி 6.59

**எல்லைகள்**

**கிழக்கு :-** மிகுதி ஆதனம்
**வடக்கு :-** செல்வநாயகம் பெண் அன்னம்மாவுக்கும். சின்னையா விமலா தேவிக்கும் உரிய ஆதனம்
**தெற்கு :-** ஒழுங்கை
**மேற்கு :-** அருணாசலம் இரங்கநாதனும் பெண் சரஸ்வதியினதும் ஆதனம்.

மேற்குறித்த ஆதனத்தை சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(CS/27837)(11,17)

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1601 | சீட்டிழுப்பு திகதி: 05.09.2019

வெற்றி இலக்கங்கள்: 22 24 26 45 E

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.37, 079, 944 /=

Web: www.dlb.lk

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி: 05.09.2019 | வெற்றி வாரம்: 2608 | வர்ணம்: கபிலம்

இடபம்
வெற்றி இலக்கங்கள்: 06 24 42 51

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,148,178 /=

06.09.2019ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW 1919

**அத கோடிபதி** ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 722
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.05

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 86,875,860/-

வெற்றி இலக்கங்கள்: 04 09 29 71 F

விசேட வெற்றி இல. 3470

அபிவிருத்தி லொத்தர் சபை
0112 333 545-47 0114 824 824, 0112 333 776 or 1919 0114 825 825

## தேவை

எமது கல்லூரி விடுதியில் சமையல் வேலைக்கு 25 - 55 வயதுக்குட்பட்ட பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்களை 10.09.2019 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.**

**அதிபர்,**
**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(IN/11163)(11,17)

## உழவியந்திரத்தில்...



குள்ளானதில் சாரதி சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துணுக்காய் கல்விளானைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து சுரேஷ்குமார் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் தலைகீழாக தடம்புரண்டுள்ளது. சாரதி உழவு இயந்திரத்தில் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்று பிற்பகல் 2 மணியளவில் சம்பவம் இடம்பெற்ற போதும் மாலை 6 மணி வரை உயிரிழந்தவரின் சடலம் சம்பவ இடத்திலேயே காணப்பட்டது.

(ஒ,5,105)

**பெயர்மாற்றம்** உமையாள்புரம் பரந்தனில் வதியும் இராகவன்பிள்ளை சுவானந்தன் என்கிற எனது பெயரை 04.09.2019ல் இருந்து இராகவன்பிள்ளை சிவானந்தம் என பெயர் மாற்றம் செய்கின்றேன்.

**சிவானந்தம்**

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றிற்கு வியாபாரம் செய்யக்கூடிய ஆணும். சமையல் உதவியாளரும் (பெண்). வேலையாளும் தேவை. வயது முதிர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**077 330 7073**

**விற்பனைக்கு**

1Sri மொரிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புக்கு- 077 691 3024**

# INVITATION FOR BID
# DISTRICT SECRETARIAT MULLAITIVU

1. The Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu on behalf of the Government Agent/ District Secretary, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive bidding (NCB). Since the total cost estimate of this procurement is below Rs.50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (ii)**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction for the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Qualifications requirements are indicate in section 4 of the Bidding document. Additional details are provided in the schedule/Bidding Date & Contract Date.(Section-5)
5. Interested bidders may obtain further information from the **Procurement Branch, District Secretariat, Mullaitivu.** And inspect the Bidding Documents at the same address on any working days from **9.00 hrs to 15.00 hrs** from**06.09.2019.** Contact numbers are: phone:-0212290096 Fax 021 229 0045.
6. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Procurement Branch, District Secretariat, Mullaitivu** from **06.09.2019** until **19.09.2019** from **9.00 hrs** to **15.00 hrs** upon payment of a non- refundable fees mentioned in the table below. The method of payment should be by cash.
7. Sealed bids shall be (Original& Duplicate) sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu** or deposited in the Tender Box available at the **Government Agent Office, District Secretariat, Mullaitivu** on or before**15.00 hrs on 20.09.2019** Late bids will be rejected, Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders representatives who choose to attend.
8. Pre bid conference will be held at Board Room commencing at **15.00** hrs on **12.09.2019.**
9. Bid shall be accompanied by bid security as per the information given in the table.

| Bid No | Description of work | Estimated amount (Rs in(million) (Excluding Vat) | Contract Period | Required Grade | Non refundable fees (Rs) | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs) | Valid Period |
| MU/KAC/DPS/2019/16 | Reconstruction of Pathukan Bridge at Katsilaimadu in Muthuiyankaddu, Mullaitivu. | 31.65 | 70 Days | C5 & C4 (Bridge) | 4000.00 | 320,000.00 | 16.01.2020 |
| MU/KAC/DPS/2019/27 | Renovation (concreting) of thenniyankulam internal road at thunukkai P.S area in mullaitivu district. | 2.83 | 60 Days | C8 & C7 (Highway) | 2000.00 | 30,000.00 | 19.12.2019 |
| MU/KAC/DPS/2019/28 | Renovation (concrete road) of raal kula road at kallappadu south in maritimepattu pradeshiyasabha. | 4.93 | 60 Days | C8 & C7 (Highway) | 2000.00 | 50,000.00 | 19.12.2019 |

**Mrs.R.Ketheeswaran,**
Chairman,
Departmental Procurement Committee
District Secretariat, Mullaitivu District.

(IN 11164)



## 24ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18 . 04 . 1907 — மறைவு 02 . 09 . 1995

### அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபால் அதிபர்-கோப்பாய்)

திதி:ஆவணிமாத பூர்வபட்ஷ அட்டமி (06.09.2019) வெள்ளிக்கிழமை

எங்களது அருமை அப்பாவே! இருபத்தி நான்கு ஆண்டுகள் கடந்தாலும் எங்களது இதயத்தில் உங்கள் நினைவை நிறுத்தி உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

க.குலராசன் (மகன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

மனைவி,
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 30.08.1923 — மறைவு 03.09.2019

### சின்னத்தம்பி இராமலிங்கம்

யாழ். பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு, பழைய வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் அவர்கள் 03.09.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், லீலாவதி, செல்வராசா (லண்டன்), விமலா (சின்னக்கா), துரைராசா (பிரான்ஸ்), திலகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பரிமளம், இரத்தினம், சொர்ணம்மா, இராசையா, பாக்கியம், தங்கம்மா மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியநாதன், சிவகுமாரன், சாரதா (லண்டன்), ஜெயகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந், வஸந், லக்ஷனா, அபிந்தா, அபிலாசன், அஸ்வீகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 021 223 0105 — தகவல்: குடும்பத்தினர்.

*அரச...*

மையச் செயற்குழுக்கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த அரச தலைவர் தேர்தலில் சுதந்திரக் கட்சியில் இருந்து வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவார் என கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலான தீர்மானம் எதிர்வரும் தினங்களில் எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ஒ.5)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

1994 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க கடன் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடன் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான வழக்கு

வழக்கு இல: MDR 433/17
வகை: பணம்
பெறுமதி : 52,50,000/=

தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி
இல.40, நவம் மாவத்தை,
கொழும்பு-02.
கிளை: இல.30, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

எதிர்

1. EUT (தனியார்) லிமிடட்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்
1. வேலுப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
2. சிறிஸ்கந்தராஜா ராஜகலா
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
3. சிறிஸ்கந்தராஜா சிந்துஜன்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின் படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திரு.என்.கே.கஜரூபன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட இவ்விற்பனை அதிகாரத்திற்கு அமைவாகவும் இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த சுன்னாகம் கிராமத்திலுள்ள "கப்பம்புலம்" என்று அழைக்கப்படும் ஆதனத்தில் நின்று 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 திகதி முற்பகல் 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆதன இடாப்பு 01:-

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலும், பிரதேச சபைப் பிரிவிலும் சுன்னாகம் கிழக்கு (J/197) கிராம சேவகர் பிரிவில் அமைந்ததும் வரிமதிப்புப் பிரிவு சுன்னாகத்தில் அமைந்ததும் சுன்னாகம் கிராமத்தில் கப்பம்புலம் என்றழைக்கப்படும் சுன்னாகம் கிழக்கு கந்தையா வீதியில் வரிமதிப்பு இடாப்பு இல.01 இல் அமைந்த காணி. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.சிற்றம்பலம் அவர்களால் அளந்து முடிக்கப்பட்ட பட இல.2697-05.09.2010 இன் படி லொட் இல.01 அதம் விசாலம் நிலப்பரப்பு 03 குழி Three Lachchams V.C (03Lms V.C) இதன் எல்லைகள்

வடக்கு : 12 அடி அகலமுள்ள ஒழுங்கை மேற்படி பட இலக்கத்தின் படி லொட் இல.03
கிழக்கு : கந்தையா வீதி.
தெற்கு : க.சுப்பரமணியத்தின் வளவு
மேற்கு : இரண்டாவது ஆதனம் மேற்படி பட இலக்கத்தின்படி லொட். இல.02
இதுவுதுமிதனுட்பட்ட பயிர் பிரயோசனங்கள் சகலதும் அது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் சுமைச் சீட்டு இல. H731/06 இல்பதியப்பட்டுள்ளது.

ஆதன இடாப்பு 02:-

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலும், பிரதேச சபைப் பிரிவிலும் சுன்னாகம் கிழக்கு (J/197) கிராம சேவகர் பிரிவில் அமைந்ததும் வரிமதிப்புப் பிரிவு சுன்னாகத்தில் அமைந்ததும் சுன்னாகம் கிராமத்தில் கப்பம்புலம் என்றழைக்கப்படும் சுன்னாகம் கிழக்கு கந்தையா வீதியில் வரிமதிப்பு இடாப்பு இல.01 இல் அமைந்த காணி. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.சிற்றப்பலம் அவர்களால் அளந்து முடிக்கப்பட்ட பட இல. 2697-05.09.2010 இன்படி லொட் இல.02 இதன் விசாலம் ஒன்பது குழி (09Kls) இதன் எல்லைகள்

வடக்கு : 12 அடி அகலமுள்ள ஒழுங்கை மேற்படி பட இலக்கத்தின்படி லொட் இல.03
கிழக்கு : முதலாவது ஆதனம் மேற்படி பட இலக்கத்தின்படி லொட் இல.1
தெற்கு : க. சுப்பரமணியத்தின் வளவு
மேற்கு : தவபாஸ்கரனின் மனைவி ஸ்ரீபிறிமாவின் வளவு இதுவுதுமிதனுட்பட்ட பயிர் பிரயோசனங்கள் சகலதும் இது யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் சுமைச் சீட்டு இல. H 853/01 இல் பதியப்பட்டுள்ளது.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலில் ஒரு பங்கை 1/4 உடன் அவ்விடத்தில் செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1%
பிஸ்கால் செலவு சிவில் நடபடிமுறைக்கோவையின் படி
விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனைக் கமிசன் சிவில் நடைமுறைக் கோவையின் படி
விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

நீதிமன்ற கட்டளைப்படி

2019 ஆம் ஆண்டு 09ம் மாதம் 04ம் திகதி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி பரமேஸ்வரி



தோற்றம் 07.02.1958 — மறைவு 05.09.2019

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரமேஸ்வரி நேற்று (05.09.2019) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்தன் - கதிரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரன் - வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் புஸ்பராசா (சமூக சேவைகள் திணைக்களம்), தர்மேந்திரா (கிராம உத்தியோகத்தர், தனங்கிழப்பு), பத்மலோசினி (பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்- சாவகச்சேரி), மோகன் (ஆண் தாதியர்- யாழ்ப்பாணம்), லோகநாதன் (முகாமை உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயசீலியா, அரிசனா, கௌசியா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியும் மேரிபிறின்சியா, தேனுசா, சர்மிகா, கோபிகன், டக்சிகா, பவிகரன், தர்வின், அஸ்மிதன், அபிலேக்சன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 207 2502, 077 977 3344, 077 417 6566

### திருமதி நாகேஸ்வரி இளமுருகனார்



வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இளமுருகனார் நேற்று (05.09.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சின்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளமுருகனாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, விஸ்வநாதன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், மீனலோஜினி, மலர்மகள், ஞானகலை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06.09.2019) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(CS/27834)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

**யா/ தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம், ஊர்காவற்றுறை**

**காலம் :- 2019.09.13 - வெள்ளிக்கிழமை**
**நேரம் :- மு.ப. 9.30 மணி**
**இடம் :- பாடசாலையின் பிரதான மண்டபம்**

பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

(C/32696)(11,17) **அதிபர் / தலைவர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் திட்டமிடல் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி **கு.சுதர்மினி** அவர்களின் அன்புத்தந்தையார்

**வல்லிபுரம் குமாரசாமி**

அவர்கள் 04.09.2019 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்ப துடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்**

## பணிப்பெண் தேவை

பாடசாலை செல்லும் பிள்ளையைப் பராமரிப்பதற்குப் பெண் தேவை.

**075 203 9589**

## பெயர்மாற்றம்

02 ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த **கோவிலான் தங்காள்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **அந்தோனி தங்கம்மா** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே ஒப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்.

(CS/27835)(11,17) **- அந்தோனி தங்கம்மா -**

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் :- சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன்**
**முகவரி :- டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்துக்கு உட்பட்ட வட்டாரம் - 14. வங்களா ஒழுங்கை ஆதன இலக்கம் 16 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி முத்துப்பிள்ளை சரவணமுத்து என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது 1917 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சரவணமுத்து சபாபதிப் பிள்ளை முகதாவில் நிறைவேறிய 9518 ஆம் இலக்க உறுதி மூலம் முருகேசு பெண் ஆச்சிக்குட்டிக்கு சீதனமாக வழங்கப்பட்டது. இவர்கள் இருவரும் இறக்க இவர்களின் பிள்ளைகளில் ஒருவரான கணபதிப்பிள்ளை சரவணமுத்து பெண் முத்துப்பிள்ளை ஆகியோர் தமது மகன் சரவணமுத்து குலேந்திரனுக்கு 1977 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் இராமப்பிள்ளை நமச்சிவாயம் சிவப்பிரகாசம் முகதாவில் நிறைவேறிய 7056 உறுதி மூலம் நன்கொடை அளித்தனர். பின்னர் 1981 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் அப்பாப் பிள்ளை நடராஜன் முகதாவில் நிறைவேறிய 796 உறுதி மூலம் மேற்குறித்த நன்கொடையை சரவணமுத்துவும் பெண் முத்துப்பிள்ளையும் நன்கொடையை அளித்து உறுதி நிறைவேற்றிக் கொண்டனர். சரவணமுத்துவும் பெண் முத்துப் பிள்ளையும் இறக்க அவர்களின் பிள்ளைகளான சரவணமுத்து இரத்தினம் தற்போது பக்கீர் மெய்யதீன் முகைதீன் அப்துல் றசாத் என்பவரும் மனைவி பசீராவும் சரவணமுத்து திலகரத்தினமும். குலேந்திரன் கைம்பெண் பராசக்தி ஆகியோரும் 2013 ஆம் ஆண்டு மாசி மாதம் 08 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் கு.விசுவலிங்கம் முகதாவில் 4781 ஆம் இலக்க உறுதிமூலம் சந்திரபோஸ் தமிழ்ச்செல்வனுக்கு அறுதி அளித்தனர்.

**ஆதன விவரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையும் கோட்டைக்காடு நிலப்பரப்பு 06 இல் சொரியலாக நிலப்பரப்பு 02 க்கு ஆக நெடுங்கால நிந்த ஆட்சிப்படி மறுபங் காளரின் சம்மதத்துடன் எல்லை வைத்து நிந்தப்படுத்தப்பட்டது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் வரைந்த வரைபட இல 3552/ 03.02.2013 இன்படி துண்டு - 02 ஆக காட்டப்பட்டதும் நிந்த ஆட்சி செய்யப்பட்டதும் ஆன நிலப்பரப்பு 01 குழி 06.59 உம் அத்திவாரமும்.

**எல்லைகள்**

**கிழக்கு :-** முருகேசு வல்லிபுரத்தின் ஆதனம்
**வடக்கு :-** செல்வநாயகம் அன்னம்மாவுக்கும். சின்னையா விமலாதேவிக்கும் உரிய ஆதனம்
**தெற்கு :-** வங்களா ஒழுங்கை
**மேற்கு :-** ச.தமிழ்ச்செல்வனுக்குரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமா கவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக் குப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)** (CS/27836)(11,17)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சிவனேஸ்வரி ஜெயரட்ணம் (பேபி)**



தோற்றம்
28.02.1952

மறைவு
02.09.2014

திதி:- 06.09.2019

எம் குடும்பத்தின் குலவிளக்கே! உங்களை
இழந்த துன்பமும் துயரமும் எம் மனதிலிருந்து
இன்னும் மறையவில்லை! மண்ணிலிருந்து
நீங்கள் மறைந்தாலும் எங்கள் நினைவில் என்றும்
நிறைந்து வாழ்கின்றீர்கள்!

உங்கள் பிரிவால் வாடும்
உங்களை நினைவு கூரும்

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

**கணவர், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

## 1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

**யாழ் கலாலயா பயிற்சியகம்**



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!**
**வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையரே!!**
**சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையரே!!! மற்றும்**
**ஆர்வமுள்ள மகளிரே!!!!**
**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- FACIALS (முக அழகுக்கலை)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்)
- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்



இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு
மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால்**
**பயிற்சிகள் யாவும் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன!**

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 15-09-2019 ஞாயிற்றுக்கிழமை**
**கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 16.09.2019 திங்கட்கிழமை**
**நேரம் 09.30 மணி**

**மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை**
**நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
29 . 12 . 1939



விண்ணில்
06 . 09 . 2012

**அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்வாங்கு வாழ்ந்து
எமை அவனியிலே வாழ வைத்த
அன்புத் தெய்வமே அப்பா!

ஆண்டுகள் ஏழு கடந்தாலும்
எம் விழிநீர் இன்னும் காயவில்லை
நேரிய பார்வையும் நிமிர்ந்த கம்பீர நடையும்
எம் நெஞ்சை விட்டகலவில்லை அப்பா!

எத்துயர் கண்டும் தளராத
நெஞ்சமும்
உற்சாகமாகச் செயற்படும்
திறனும்
மீண்டும் ஒருமுறை எம்முடன்
வாழ
வாருங்கள் அப்பா! எம்மிடம்
வாருங்கள்

47/II, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில். (CS/27639)(11,17)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**



# மாநகர செயற்றிட்டம்

உறுதி
இருக்க நினைக்கும் நாட்டிற்கு

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சினால்
நடைமுறைப்படுத்தப்பட்டு வரும்
சுகித புரவர "எழில் நகரம்" அபிவிருத்தித் திட்டத்தின்
நிதியொதுக்கீட்டினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின்
திட்டங்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள

**யாழ்ப்பாணம் முனீஸ்வரன் சாலை திறப்பு விழா மற்றும்**

**2,350 | மில்லியன் ரூபா**

முதலீட்டுச் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள
**நகர மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழா**

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர்
**கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களின்**
அழைப்பின் பேரில்

யாழ்ப்பாண கௌரவ நகரபிதா
**இம்மானுவல் ஆனல்ட் அவர்கள்**

வட மாகாண கௌரவ ஆளுநர்
**கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள்**

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்
மற்றும் மாநகர சபை உறுப்பினர்களின் பங்கேற்றலுடன்

கௌரவ பிரதமர்
**ரணில் விக்கிரமசிங்க அவர்களின்**
தலைமையில்

**2019 செப்டம்பர் 07 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு**

**யாழ்ப்பாணம் பழைய நகர மண்டப வளாகத்தில் நடைபெறும்**

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு மாநகர மக்கள், யாழ். மாவட்ட மக்கள், தமிழ் பேசும் உறவுகள், அரசியல் தலைவர்கள். கல்வியியலாளர்கள், சமூகமட்ட சிவில் அமைப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள், வர்த்தகர்கள், அரச உத்தி யோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரையும் மாநகர சமூகம் அன்போடு அழைக்கின்றது.

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

அத்தியாவசிய பொருட்கள் தொடர்பாக

# அதிகுறைந்த விலை

காகில்ஸ் புட்சிட்டியில் மட்டுமே

ரூ. 82 உள்நாட்டு சம்பா அரிசி 1kg

ரூ. 107 மைசூர் பருப்பு 1kg

ரூ. 80 உள்நாட்டு நாட்டரிசி 1kg

ரூ. 70 உள்நாட்டு சிவப்பு பச்சரிசி 1kg





ரூ. 205 மைசொய்ஸ் மெக்கரல் 425g

ரூ. 98 வெள்ளைச் சீனி 1kg

ரூ. 160 கடலை 1kg

ரூ. 235 பயறு 1kg


இச்சலுகை 2019 செப்டெம்பர் 11 வரை மட்டுமே.


Cargills food city

Cargills

# சிலி போராட்டங்களின் தேசம்







சிலியின் வடக்குப் பகுதியில் உள்ள அத்தாகாமா பாலைவனம்தான் உலகிலேயே மிக வறட்சியான பகுதியாக இருந்துவருகிறது. சகாரா பாலைவனத்தில்கூட ஓர் ஆண்டில் நான்கு மில்லி அளவு மழை பெய்யும். ஆனால், அத்தாகாமாவில் பூமி தோன்றிய காலத்திலிருந்தே மழை பெய்ததில்லை. அத்தாகாமாவின் தனித்தன்மை என்னவென்றால், அதன் வெப்பம் அல்ல குளிர். சகாராவில் வெப்பம் அதிகம். அத்தாகாமாவின் வெப்பம் 40 டிகிரி செல்சியஸ் அளவுதான். ஆனால், இரவில் குளிர் 5 டிகிரி செல்சியஸ் வரை போகும். மேலும், விலை உயர்ந்த தாமிர, தங்க, நைட்ரேட் சுரங்கங்கள் இந்தப் பாலை வனத்தில் அதிகம் உள்ளன. (சிலி முழுவதுமே சுரங்கங்கள் அதிகம்). இது தவிர, இந்தப் பாலை நிலத்தில் உள்ள அரிகா, இக்கிக்கி, அந்தொபகாஸ்தா ஆகிய மூன்று ஊர்களிலும் 10 லட்சம் பேர் வசிக்கிறார்கள்.

உலகப் பயணிகளின் மெக்காவாக உள்ள நாடுகள் இரண்டு பெரு மற்றும் அதன் கீழே உள்ள சிலி. பெரு 15ஆம் நூற்றாண்டின் இன்கா நாகரிகத்தின் தொட்டிலான மாச்சு பிச்சுவின் காரணமாக முக்கியத்துவம் பெறுகிறது. சிலிக்குச் செல்பவர்கள் இரண்டு விதமான பயணிகள். ஒன்று, அதன் நம்ப முடியாத நிலவியல் அமைப்பால் ஈர்க்கப்பட்டுச் செல்பவர்கள். இரண்டாவது ரகம், அதன் கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டவர்கள்.

### சிலியின் நிலவியல்

மலைகளும், வனங்களும், கடலும் சூழ்ந்த இந்த இடம்தான் பூமி உருண்டையில் மனிதர்கள் வாழும் கடைக்கோடி நிலம். குளிர் எப்போதும் பூஜ்யத்தில் இருக்கும். ஜனவரி, பெப்ரவரிதான் சிலியின் கோடை காலம். அப்போது தியர்ராவின் வெப்பம் 11 டிகிரி வரை போகும். தியர்ரா தென் பூகோளத்திலிருந்து பின்னோக்கிப் போனால் அண்டார்டிக்கா. வடதிசை நோக்கிப் பயணித்தால் அத்தாகாமா பாலைவனம். அதனால்தான், சிலி உலக சுற்றுலாப் பயணிகளிடையே ஒரு அதிசய தேசமாகக் கருதப்படுகிறது. தெற்கே தென்துருவப் பனிப் பிரதேசம். வடக்கே பூமி தோன்றியதிலிருந்தே மழையைக் காணாத பாலைவனம். மேற்கே மற்றொரு அதிசயம். அதன் பெயர் ஈஸ்டர் தீவு. உலகின் மேற்கு மூலையான இத்தீவில் 2 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இங்கே மனிதக் குடியிருப்பு தொடங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. தலைநகர் சந்தியாகோவிலிருந்து விமானத்தில் 5 மணி நேரப் பயணம். கப்பலோ படகோ ஈஸ்டர் தீவுக்குச் செல்வதில்லை.

ஈஸ்டர் தீவில் ஆயிரம் சிலைகள் அமைந்துள்ளன. மோவாய் சிலை என்று அழைக்கப்படும் இச்சிலைகள், ஒரே கல்லால் செய்யப்பட்டவை. இங்கே வாழ்ந்த ராப்பா நூயி மக்களால் 1215 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் இச்சிலைகள் அளவில் பிரம்மாண்டமானவை. இதில் ஆகப் பெரிய சிலையின் உயரம் 33 அடி. மேலும், சிலியில் ஏகப்பட்ட எரிமலைகளும் பனிமலைகளும் உள்ளன. இப்படி இயற்கையின் பல்வேறுபட்ட ரூபங்களைக் கொண்டதால் சிலி உலகப் பயணிகளின் முதல் நிலமாக இருந்துவருகிறது.

### கலை கலாசாரம்

சிலி மக்களிடம் உரையாடியபோது; எனக்கு இருந்த சந்தேகம் தீர்ந்துவிட்டது. அவர்கள் மிகுந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும், கலை கலாசாரத்தின் மூலமே தங்கள் வாழ்வை அர்த்தபூர்வமுள்ளதாக ஆக்கிக்கொள்கிறார்கள். உதாரணமாக, 1945ஆம் ஆண்டில் அத்தாகாமா சுரங்கத் தொழிலாளர்கள் பாப்லோ நெரூதாவைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். நெரூதா சொல்கிறார், அத்தொழிலாளர்களுக்கு எழுதப் படிக்கக்கூடத் தெரியாது. குளிருக்கு உடுத்த உடை இல்லை. படுக்கப் பாய் இல்லை. உண்ண உணவில்லை. குடிக்கத் தண்ணீர்கூட இல்லை. ஆனால், ஒவ்வொரு வீட்டிலும் என்னைக் கவிதை வாசிக்கச் சொன்னார்கள் என்று.

சிலி முழுவதும் இப்போதும் மக்கள் கலை, கலாசாரத்தைத்தான் தங்கள் வாழ்வின் அர்த்தமாகக் காண்கிறார்கள். தேசம் முழுவதும் ஒரு சினிமா போஸ்டரையோ வேறு எந்த சுவரொட்டிகளையோ பார்க்க முடியவில்லை. எவரும் சினிமா நடிகர்களைக் கொண்டாடுவதில்லை. சினிமா என்றால் நம் மொழியில் ஆர்ட் பிலிம்தான். நாடகம் என்றால் சீரியல் நாடகம்தான். இசை என்றால் எமக்கு வெறும் கேளிக்கை. சிலியர்களுக்கு அது வாழ்க்கை. இசைக் கலைஞர்களின் கிதார் சப்தமும் குரலும் கேட்காத தெரு முனைகளே சிலியில் இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் சால்வதோர் அயெந்தே 1973 செப்ரெம்பர் 11ஆம் திகதியன்று அவருடைய இராணுவ ஜெனரல் பினோசெத்தினால் கொல்லப்பட்டார். அந்தப் படுகொலைக்கு அமெரிக்க அரசு உதவியாக இருந்தது. லா மொனேதா என்று அழைக்கப்படும் அதிபர் மாளிகையின் மேலே ஆகாயத்திலிருந்து விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின. அதிபருக்கு அடிபணிய வேண்டிய இராணுவ அதிகாரிகளே பினோசெத்தின் பேச்சைக் கேட்டு, அதிபர் மாளிகையை டாங்கிகளால் இடித்துத் தள்ளினர். அப்போது ஒரு ஐந்து நிமிடம் டாக்டர் அயெந்தே வானொலியின் மூலம் மக்களிடம் உரையாற்றினார். அதையும் அவரது குரலில் கேட்பதற்காகத்தான் நான் சிலி சென்றேன்.

### என் வார்த்தைகளில் கசப்பு இல்லை

அந்தக் கடைசிப் பேச்சு: ‘என்னருமைத் தோழர்களே! நிச்சயமாக இதுதான் நான் உங்களிடையே பேசும் கடைசி சந்தர்ப்பமாக இருக்கும். தேசிய வானொலி அலுவலகங்களின் மீது விமானப் படை குண்டு வீசித் தாக்கிவிட்டது. என் வார்த்தைகளில் கசப்பு இல்லை. ஆனால், ஏமாற்றம் இருக்கும். தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழியையே மறந்துவிட்டு, தேசத்துரோகத்தைச் செய்ய முனைந்திருக்கும் அந்த இராணுவ அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் தார்மீக ரீதியான தண்டனை காத்திருக்கிறது. அதிலும் திரு மெந்தோஸா நேற்றுதான் அரசு சார்பில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அவரும் இந்த நம்பிக்கைத் துரோகத்தில் முன்னணியில் நிற்கிறார். இந்தச் சூழ்நிலையில் என்மீது நம்பிக்கை வைத்து என்னைத் தங்கள் அதிபராகத் தேர்ந்தெடுத்த தொழிலாளர்களுக்குச் சொல்ல ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. நான் பதவி விலக மாட்டேன்! வரலாற்றின் இந்த முக்கியமான தருணத்தில் மக்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்கு என் உயிரைக் கொடுப்பதன் மூலம் நன்றிக்கடன் செலுத்துகிறேன். உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன். எனக்கு நிச்சயமாகத் தெரியும், பல்லாயிரக்கணக்கான சிலியர்களின் மனசாட்சியில் விதைக்கப்பட்ட நம்பிக்கையின் விதைகள் எந்தக் காலத்திலும் கருகிவிடாது. நம்மைத் தோற்கடிக்கும் வலிமை அவர்களிடம் இருக்கிறது. ஆனால், சமூக நீதி என்பதை அதிகாரத்தின் மூலமும் வன்முறைக் குற்றங்களின் மூலமும் சாதித்துவிட முடியாது. வரலாறு எம்முடையது. மக்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்.

என் தேசத்தின் அற்புதமான பெண்களே! விவசாயப் பெண்மணிகளே!! நீங்கள்தான் இத்தேசத்தின் ஆன்மா! அதே போல் இந்த தேசத்தின் மீது அன்பும் நேசமும் கொண்டு உழைத்துக்கொண்டிருக்கும் உழைப்பாளிகளே! உங்களிடமெல்லாம்தான் நான் எனது இந்தக் கடைசித்தருணத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன்.

### மக்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்


டாக்டர் அயெந்தே சொன்னதுபோல் கொடுங்கோலன் பினோசெத்தின் 17 ஆண்டுகளை மக்கள் துர்க்கனவாக எண்ணிக் கடந்தார்கள். இப்போது டாக்டர் சால்வதோர் அயெந்தேயை தங்களின் தேசத்தந்தையாகக் கொண்டாடுகிறார்கள். லா மொனேதா மாளிகையின் முன்னே நின்றபோது வரும் கண்ணீரை அடக்க முடியாமல்போனது. அதேபோல், மியூசியத்தில் டாக்டர் அயெந்தேவின் கடைசிப் பேச்சைக் கேட்டபோது துக்கம் தாங்க முடியாத அளவுக்கு இருக்கும்.


மக்கள் மீது எவ்வளவு நேசமும் பிடிப்பும் வெளிப்படும் வார்த்தைகள் அவை: ‘நம்மைத் தோற்கடிக்கும் வலிமை அவர்களிடம் இருக்கிறது. ஆனால், சமூக நீதி என்பதை அதிகாரத்தின் மூலமும் வன்முறைக் குற்றங்களின் மூலமும் சாதித்துவிட முடியாது. வரலாறு நம்முடையது. மக்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள்! ■

*நன்றி: இந்து தமிழ் திசை*

# தென்னிலங்கை அரசியலால் முழு நாட்டுக்கும் பேராபத்து

இந்துமதி





தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் முழு நாட்டுக்கும் ஆபத்தை விளைவித்து விடுமோ என்ற அச்சநிலையொன்று தோன்றியுள்ளது. உலகின் ஏனைய ஜனநாயக நாடுகளிலும் தேர்தல்கள் இடம்பெறத்தான் செய்கின்றன. தேர்தலின்போது கட்சிகளுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டாலும் இலங்கை அளவுக்கு மோசமானதொரு நிலை அங்கு காணப்படவில்லை. மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் சில மாதங்களுக்கு முன்னரே நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெற்றன. தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கும் அங்கு குறைவில்லை. ஆனால் இந்திய அரசு தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. புதிய அரசு ஆட்சியில் அமர்ந்தும் விட்டது. ஆனால், இந்தியாவுடன் ஒப்பிடும்போது நிலப்பரப்பிலும், சனத்தொகையிலும் மிகச்சிறிய அளவைக்கொண்ட இலங்கையில் அந்த நிலை காணப்படவில்லை.

**மாகாண சபைத் தேர்தலைக்கூட நடத்தமுடியாத நிலையே இங்கு**

மாகாண சபைத் தேர்தலைக்கூட நடத்த முடியாத நிலைதான் இங்கு காணப்படுகின்றது. பழைய முறைமை, புதிய முறைமை என்றெல்லாம் பேச முடிகின்றதே தவிர, மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியவில்லை. மாகாண சபைகளின் ஆயுள்காலம் எப்போதோ முடிவடைந்தபோதிலும் தேர்தல்கள் இடம்பெறாததால் ஆளுநர்களே மாகாண ஆட்சியை மேற்கொள்கின்றனர். சில ஆளுநர்கள் தமது எண்ணம் போன்று நிர்வா கத்தை நடத்திச் செல்வதையும் காண முடிகின்றது. மக்கள் பிரதிநிதி களின் ஆட்சி மாகாண சபைகளில் இடம்

பெறாததால் ஜனநாயக ரீதியான சூழ்நிலை அங்கு காணப்படவில்லை. மக்கள் தமது குறைகளைக் கூறி நிவாரணம் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஏனென்றால் ஆளுநர்களால் தனியாகச் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணமுடியாது. ஆகவே மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெற்று மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதே சிறந்ததாகும். ஆனால் அதற்குக்கூட இந்த நாட்டில் வழியேற்படாமை கவலைக்குரியது.

**அரச தலைவர் தேர்தல் தொடர்பாகப் பேச்சுகள்**


தற்போது அரச தலைவர் தேர்தல் தொடர்பாகவே பலரும் பேசுகின்றனர். அந்தப் பதவியில் அமர்ந்து விடுவதே பலரது இலட்சியமாகவும் காணப்படுகின்றது. மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கோத்தபாயவின் பெயரை வேட்பாளராக முன் மொழிந்துள்ளது. ஆனால், கோத்தபாய விடயத்தில் பல சிக்கல்கள் உள்ளமை தெரியவந்ததால் தேர்தலில் அவரால் போட்டியிட முடியுமா? என்ற சந்தேகம் பலரிடத்திலும் எழுந்துள்ளதைக் காண முடிகின்றது. ஆனால் தாம் போட்டியிடுவதில் கோத்தபாய உறுதியாகவே உள்ளார். போகப் போகத்தான் இதன் முடிவு தெரியவரும்.

ஒருநாட்டில் அமைதியும், சுபீட்சமும் பொருளாதாரத்தில் தன்னிறைவும் காண வேண்டுமென்றால் அங்கு நிலையான அரசு ஒன்று பதவியில் அமர்ந்திருத்தல் அவசியமாகும். அங்கு அரசியல் குழப்பங்கள் அடிக்கடி இடம்பெறுமானால் மேலே குறிப்பிட்ட இலக்குகளை ஒருபோதுமே எட்டிவிட முடியாது.
இவ்வாறானதொரு நிலையில்தான் தற்போது இந்த நாடு காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் தம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்காமல் நாட்டைப் பற்றியும் ஒருகணம் சிந்தித்துப்பார்த்தால் நாட்டின் தலைவிதியே மாறிவிடும்.

இதுவரைகாலமும் அமைதியாக இருந்து செயற்பட்ட அரச தலைவர் தற்போது சிலிர்த்தெழ ஆரம்பித்து விட்டார். தமது பதவிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் நிற்கின்ற அவர், தமது ஆதரவுடன் அமைக்கப்பட்ட ரணில் தலைமையிலான அரசின்மீது கடும்கோபத்தில் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. அடுத்த ஆட்சியைத் தமது தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியே அமைக்குமெனவும் அவர் கூளுரைத் துள்ளார். அதுமட்டுமல்லாது ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான வெறுப்பையும் காட்டிவருவதோடு அந்தக் கட்சி தலைமையிலான அரசு மீது குற்றச் சாட்டுக்களையும் அடுக்கி வருகின்றார்.

**சந்திரிகாவின் மறுவருகை**


இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகா அம்மையாரின் மீள்வருகை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்திய அதேவேளை மகிந்த தரப்பினருக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மகிந்த அணியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துவிடுமென எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற நிலையில் சந்திரிகாவின் வருகை அந்த எதிர்பார்ப்பைப் பொய்யாக்கிவிட்டது. ஏனென்றால் மகிந்தவுடன் சந்திரிகா ஒருபோதுமே சமரசம் செய்துகொள்ள மாட்டாரென்பது அனைவருக்கும் தெரிந்தவிடயமாகும். இதனால் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுந்திரக்கட்சியின் ஆதரவு மகிந்த தரப்புக்குக் கிடைக்கவே மாட்டாது. அது மட்டுமல்லாது கோத்தபாய தேர்தலில் போட்டியிட்டால் அவரை எப்பாடுபட்டேனும் தோற்கடிப்பதற்கே சந்திரிகா முயற்சிகளை மேற்கொள்ளுவார்
இதேவேளை- அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பங்கள் நீடிக்கவே செய்கின்றன. ரணிலும், சஜித்தும் எந்த வகையிலும் விட்டுக்கொடுப்ப தாகவே தெரியவில்லை. சஜித்தைப் பதவிக்கு வரவிடாமல் தடுப்பதில் ரணில் விக்கிர மசிங்க முனைப்புடன் உள்ளமை தெளிவாகவே தெரிகின்றது. ஆனால் ஐ.தே.கவைப் பொறுத்தவரையில் அதன் அநேகமான முக்கிய உறுப்பினர்கள் சஜித்தை ஆதரிப்பதை அறிய முடிகின்றது. மேலும் எவ்வாறாயினும் சஜித் தேர்தலில் போட்டியிடுவாரென்பது தெளிவாகவே தெரிகின்றது. அதுமட்டுமல்லாது அவருக்கு ஆதரவான கூட்டணியை அமைப்பதற்குத் திரைமறை வில் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் தெரியவருகின்றது. ஒருநாட்டில் அமைதியும், சுபீட்சமும் பொருளாதாரத்தில் தன்னிறைவும் காண வேண்டுமென்றால் அங்கு நிலை யான அரசு ஒன்று பதவியில் அமர்ந்திருத்தல் அவசியமாகும். அங்கு அரசியல் குழப்பங்கள் அடிக்கடி இடம்பெறுமானால் மேலே குறிப்பிட்ட இலக்குகளை ஒருபோதுமே எட்டிவிட முடியாது.
இவ்வாறானதொரு நிலையில்தான் தற்போது இந்த நாடு காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் தம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்காமல் நாட்டைப் பற்றியும் ஒருகணம் சிந்தித்துப்பார்த்தால் நாட்டின் தலைவிதியே மாறிவிடும்.



# மீண்டெழவேண்டும் ருவாண்டா

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் மனித வரலாற்றில் ஒப்பீடு செய்ய முடியாத மிகக் கொடுமையான சம்பவம் நடந்து இந்த வருடத்துடன் 25ஆண்டுகள்நிறைவு பெறுகின்றன. 1994ஆம் ஆண்டில் ருவாண்டா மக்கள் தொகையில் ஏறக்குறைய 10 சதவீதம் பேர், அதாவது 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். ஹூட்டு இனத்தைச் சேர்ந்த ருவாண்டா அதிபர் வானூர்தி விபத்தில் இறந்ததற்கு டுட்சி இனத்தவர் தான் காரணம் என்பதால், டுட்சி இனத்தவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இத்தனை பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து 3 மாதங்களாக நடந்த மனித வேட்டையை உலகமே அதிர்ச்சியோடு பார்த்தது. ஐ.நா. சபை இந்தப்படுகொலையைத் தடுக்க எதுவும் செய்ய முடியாமல் வேடிக்கை மட்டுமே பார்த்தது. அப்போது நடந்த சம்பவங்களை ருவாண்டா மக்கள் இப்போது நினைத்துப் பார்த்து, தங்கள் வாழ்க்கையில் இழந்ததை மறந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறார்கள்.

**வரலாற்றில் மனித குலமே வெட்கப்படக் கூடிய படுகொலைச் சம்பவங்கள் பல நாடுகளில் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நாடுகளில் ருவாண்டாவும் ஒன்று. மிகக் கொடூரமான வன்முறைச் சம்பவங்கள் நடந்த போது, அதைத் தடுக்க உலக நாடுகள் அனைத்துமே எதுவுமே செய்யவில்லை.**



### வரலாறு வெட்கும்படியான படுகொலைச் சம்பவங்கள்

வரலாற்றில் மனித குலமே வெட்கப்படக் கூடிய படுகொலைச் சம்பவங்கள் பல நாடுகளில் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நாடுகளில் ருவாண்டாவும் ஒன்று. மிகக் கொடூரமான வன்முறைச் சம்பவங்கள் நடந்தபோது, அதைத் தடுக்க உலக நாடுகள் அனைத்துமே எதுவுமே செய்யவில்லை. கம்போடியாவில் பைத்தியக்காரத்தனமான கொள்கைகளின் அடிப்படையில் 20 லட்சம் கம்போடிய மக்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான போல் பாட், ஜெங்க் சாரி, டா மாக் ஆகியோர் நடத்திய படுகொலைகள் எத்தனை பேருக்கு நினைவிருக்கும்? கம்போடியாவின் கொலைக் களங்கள், கடந்த 1975 முதல் 1979 வரை நடத்தப்பட்ட கொடூரமான படுகொலைகளின் சாட்சியாக இருக்கின்றன. கொலைக்கு காரணமான போல் பாட், 1997ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். அடுத்த ஆண்டே வீட்டுக்காவலில் இருந்தபோது இறந்து போனதால், செய்த தவறுக்கு நீதி கிடைக்காமலே போய்விட்டது. நாம் பென் நகரில் உள்ள டுவால் ஸ்லெங் அருங்காட்சியகத்தில் போல் பாட் பயன்படுத்திய சித்திரவதைக் கூடங்களின் ஒளிப்படங்களைப் பார்க்கும்போது உடல் சில்லிட்டுப் போய்விடும். கம்போடிய மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர், அதாவது 30 லட்சம் பேருக்கு மேல் கலவரம் நடந்த 4 ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.



கடந்த 1994ஆம் ஆண்டில் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இப்போது பிரகாசமாக இருக்கிறது. எப்படி நடந்தது இது? ருவாண்டா மீண்டும் ஒரே குடும்பமாகி விட்டது என படுகொலைகள் நடந்த 25ஆவது ஆண்டு நினைவு தினத்தில் அந்த நாட்டின் அதிபர் போல் காகமே கூறியிருக்கிறார். ருவாண்டாவில் டுட்சி இனத்தவர் மீது, ஹூட்டு தீவிரவாதிகள் நடத்திய படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வந்த போராளிப் படைகளின் கொமாண்டராக இருந்தவர்தான் காகமே. எங்கள் மக்களின் கரங்கள் இணைந்து நாட்டின் தூண்களாக உருவெடுத்திருக்கின்றன. எங்களின் உடல்களும் மனங்களும் காயங்களாலும் தழும்புகளாலும் நிறைந்திருக்கின்றன. ஆனால், யாரும் தனியாக இல்லை. போராடும் குணம் கொஞ்சமும் குறையவில்லை. இங்கு என்ன நடந்ததோ, அது இனி ஒருபோதும் நடக்காது என்கிறார் அவர். அதிபர் காகமே மீதும் அரசியல்ரீதியாகப் பல விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன என்றாலும் நாட்டை ஆழமான அதிர்ச்சியில் இருந்து மீட்டு, வலுவான பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தி மீட்டதால் நற்பெயர் இருக்கிறது. அவரின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு நல்ல பயனும் கிடைக்கத் தொடங்கியுள்ளது. 2017ஆம் ஆண்டில் மூன்றாம் முறையாக அவர் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த ஆண்டில் ருவாண்டா 7 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாக ஆபிரிக்க வளர்ச்சி வங்கி கூறியிருக்கிறது.

### படுகொலைகளைத் தவிர்க்க வேண்டிய பொறுப்பு பன்னாடுகளுக்கு உள்ளது

இனப்படுகொலை பல விதமானது. ருவாண்டாவில் இரண்டு பழங்குடி இனத்தவரிடையே உருவாகிய முரண்பாடு, துப்பாக்கியால் சுட்டுக் கொண்டும் கோடாரிகளால் வெட்டிக் கொண்டும் லட்சக்கணக்கானோரை காவு கொண்டது. கம்போடியாவில், தன் கொள்கைகளை எதிர்த்த அத்தனை பேரையும் பழி வாங்கினார் போல் பாட். கண்ணாடி அணிந்தவர்கள் எல்லாம் தனது அதிகாரத்தைத் தட்டிக் கேட்கும் அறிவுஜீவிகளாக இருக்கலாம் என நினைத்து அவர்கள் அனைவரையும் கொன்ற கொடுமையும் அப்போது அரங்கேறியது. போல் பாட் கும்பலின் அதிகார வெறி காரணமாக அரசுப் படைகளுக்கும் அப்போதைய அரச குடும்பத்து இளவரசர் நரோடம் சிஹானுக்கின் படைகளுக்கும் இடையில் 20 ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடந்தது. போல் பாட் இறந்து 20 ஆண்டுகள் ஆனபிறகும், அவரின் கொடூரமான கொள்கைகளால் பொருளாதார ரீதியாக இன்னமும் பின் தங்கியே இருக்கிறது கம்போடியா.

உலகின் எந்த மூலையிலும் இனியும் இதுபோன்ற படுகொலைகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு, பன்னாட்டுச் சமுதாயத்துக்கு இருக்கிறது. கலவரம் நடக்கும் நாடுகளின் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதை விடவும், இனப்படுகொலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுதான் மிகவும் அவசியம். இதில் சோகமான விஷயம் என்னவென்றால், தீவிரவாதிகள் மட்டுமல்லாமல், உலகத் தலைவர்களும் தங்களின் அரசியல் ஆதாயத்துக்காக வெறுப்பு உமிழும் கருத்துகளைப் பேசி வருவதுதான். இனப்படுகொலைகளுக்கு ஒரு சாராரின் தீவிரக் கொள்கைகள் மட்டுமே காரணமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு பிரிவினர் மீதான வெறுப்பும், அந்த வெறுப்புடன் கூடிய குற்றங்களும் கூட திட்டமிட்ட படுகொலைகள் நடக்க முக்கிய காரணமாக இருக்கின்றன.

## ஆசிரியருக்கான கடிதம்

# விலங்கு விசர்நாய் ஊசிக்கு 80 ரூபாவா?

ஆனைக்கோட்டை - பிடாரி அம்மன் கோவில் பகுதியில் அண்மையில் விலங்கு விசர்நாய் தடுப்பூசி போடப்பட்டது. ஒரு நாய்க்கு தடுப்பு ஊசி போடுவதற்காக 80 ரூபா பெறப்பட்டது. நாய்க்கான ஒரு கழுத்துப் பட்டியையும் அவர்கள் தந்தனர். கடந்த வருடங்களைப் பார்க்கிலும் இது அதிகம் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. எனினும் இந்த வருடத்துக்கான விலை அதிகரிப்பாக இருக்கும் என்று எண்ணிவிட்டு அதை விட்டுவிட்டேன். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அண்மையில் எனது நண்பரொருவர் தனது வளர்ப்பு நாய்க்கு ஊசி போட்டார். அவரிடம் இருந்து 30 ரூபா கொடுப்பனவே பெறப்பட்டது. ஏன் என்னிடம் இருந்து 50 ரூபா மேலதிகமாகப் பெறப்பட்டது? ஒரு நாய் என்றால் பரவாயில்லை. நான் மொத்தம் நான்கு நாய்களை வளர்க்கின்றேன். மொத்தம் 200 ரூபாவை நான் மேலதிகமாகக் கொடுத்துள்ளேன். கழுத்துப் பட்டிக்கான மேலதிக அறவீடுதான் அது என்றால் அதைத் தெரிவித்து எனது நாய்களுக்கு ஏற்கனவே கழுத்துப்பட்டி உள்ளதா? இல்லையா? என்று உறுதிப்படுத்திய பின்னரல்லவா பணத்தைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு எவர் பொறுப்பு? என்ன பதில் தரப்போகிறார்கள்?.

*ஆர். லயனல், ஆனைக்கோட்டை.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

தமிழருக்கு மட்டுமன்றி முழு நாட்டுக்கும் நன்மையான

# 19ஆவது திருத்தத்தை ஆதரித்திருந்த மைத்திரியார் தற்போது குத்துக்கரணம்

## ஏனென்று புரியவில்லை என்கிறார் சி.வீ.கே.

*யாழ்ப்பாணம், செப். 6*

**19** ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையிலிருப்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்குமே நன்மையானது. இந்தச் சட்டவரைபு மக்களுக்காகக் கொண்டு வரப்படுகின்றது என்று ஆதரவு தெரிவித்த அரசதலைவர் மைத்திரி பால சிறிசேன, தற்போது குத்துக்கரணம் அடிப்பது ஏன் என்று தெரியவில்லை என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டவரைபு ஒழிக்கப்பட வேண்டும் என்று அரசதலைவர் கோரியுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நடைமுறையில் இருப்பதால்தான் பல ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டவரைபு இரத்துச் செய்யப்பட்டால் அது 18 ஆவது திருத்தச் சட்டவரைபுக்கு வழிவகுத்து நடைமுறைக்கு வருவதுடன் அரசதலைவரின் வரையறையற்ற அதிகாரங்களைச் செலுத்தக்கூடியதாக அமையும். அது ஜனநாயகத்துக்கு விரோதமாகவே இருக்கும்.

19ஆவது திருத்தச் சட்டவரைபால் ஆணைக்குழுக்கள் அனைத்தும் சுயாதீன தன்மையுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் தலையீடுகள் அற்ற தன்மை காணப் படுகின்றது. இந்தச் சட்டவரைபு ஊடாக சுயாதீன நீதி ஆணைக் குழுவும் செயற்படுகின்றது.

நாட்டில் அண்மையில் அரசதலைவர் நடத்திய அரசியல் சூழ்ச்சிக்கு நீதித்துறை ஊடாக நீதி கிடைத்தது. இந்தச் சட்டவரைபு இருந்தமையால்தான் நீதி ஆணைக்குழுவும் சுயாதீனமாக இயங்கியது. அது இல்லாதிருந்திருந்தால் அன்று நீதி மறுக்கப்பட்டிருக்கலாம். அல்லது தாமதப் படுத்தப்பட்டிருக்கலாம்.

தலைமைஅமைச்சர், சபாநாயகர் ஆகியோர் நாடாளுமன்றுக்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டியவர்கள். அரசதலைவரைவிட தலைமை அமைச்சருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சபாநாயகர் அதிகார கட்டமைப்பின் தலைவராக மட்டுமே உள்ளார். அவருக்கு என்று தனி அதிகாரங்கள் எவையும் இல்லை. எனவே இந்தச் சட்டவரைபு மாற்றப்படக் கூடாது- என்றார். (து-ரி1)



## சிவ தீட்சை பெற்றோருக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயில்கின்ற 35 ஆசிரியர்கள் அண்மையில்சிவதீட்சை பெற்றுக்கொண்டனர்.

அவர்கள் சிவதீட்சை பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்திச்சான்றுப் பத்திரம் மற்றும் புத்தகப் பரிசுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வு கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நேற்று கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சான்றுப்பத்திரங்களை வழங்கி மதிப்பளித்தார்.

சிவதீட்சை பெற்றுக் கொண்டோரில் பலர் மலையகத்தைச்சேர்ந்த ஆசிரியப் பயிலுநர்கள். (ஐ)

## பயிற்சி செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளால் நடத்தப்படும் பொது நூலகங்களில் கடமையாற்றும் நூலக பரிசாரகர்களுக்கு2020 பொதுநூலக நிலைபேண்தகு அபிவிருத்தி ம்றறும் பயிற்சி செயற்றிட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம்பொதுநூலகமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும்பயிற்சிசெயற்றிட்டத்துக்கு உள்ளூராட்சி சபைகள்ஒருநூலகப்பரிசாரகரைஅனுப்பிவைக்கு மாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-9)

## மேலதிக கள் வைத்திருந்த நான்கு பேருக்குத் தண்டம்

கொடிகாமம், செப்.6

மேலதிகமாகக் கள் வைத்திருந்த நான்கு பேருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தால் யாழ்ப்பா ணம் சாவகச்சேரி பகுதியில் மேலதிக கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நான்கு பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்குத் தலா 500 ரூபா வீதமும், மற்றைய இருவருக்குத் தலா ஆயிரம் ரூபா வீதமும் மொத்தமாக 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-159)



சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்ட ஞானவைரவர் ஆலயக் குடமுழுக்கு நேற்று இடம்பெற்றது. நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள், வர்த்தகர்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. (க-9)



## பன்னாட்டு திரைப்பட விழா யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.6

5ஆவது பன்னாட்டுத் திரைப்பட விழாவை முன்னிட்டு 'ரான்சிற்' என்றும் திரைப்படம் யாழ்ப்பாணம் 'காகில்ஸ்' திரையரங்கில் நேற்றுமுன்தினம் திரையிடப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பன்னாட்டுத் திரைப்பட திருவிழாக் குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வை, யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆரம்பித்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் யாழ்ப்பாண இந்திய கொன்சியூலர் பாலச்சந்திரன்,திரைப்படத் திருவிழாக் குழு உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## 4 பாடசாலைகளில் கட்டடங்கள் திறப்பு

சாவகச்சேரி செப்.6

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் நான்கு பாடசாலைகளில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் எதிர்வரும் 9ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளன.

மைய கல்வி அமைச்சால் அயலில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடங்களை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் திறந்துவைக்கவுள்ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட அதிபர் விடுதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மற்றும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட ஆரம்ப கற்றல் வள நிலையங்களை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட 3 மாடி வகுப்பறைத் தொகுதியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் திறந்து வைக்கவுள்ளனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஜ-9)

## நடமாடும் சேவையும் மருத்துவ முகாமும்

யாழ்ப்பாணம், செப்.6

இலவச நடமாடும் சேவையும்,மருத்துவ முகாமும் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி மாற்றம் பணிமனையில் காலை 8 மணியில் இருந்து மதியம் 12 மணிவரை நடைபெறவுள்ளன.

கோப்பாய் பொலிஸ் சிவில்பாதுகாப்பு அமைப்புடன் தமிழ்த்தாய் மன்றம் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.செப்.6

2019/2018 வரிமதிப்பாண்டுக்கான புதிய வருமான வரி விவரத் திரட்டுக்களை முழுமைப்படுத்தல் தொடர்பான இலவச தெளிவூட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.


நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட் போர் கூடத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம்12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (ஐ)

## உந்துருளியை உரிமை கோர அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள உந்துருளி ஒன்று இதுவரை உரிமை கோரப்படவில்லை. NPHG 2455 என்ற இலக்கமுடைய குறித்த உந்துருளியை, எதிர்வரும் 2 மாத காலத்துக்குள் அலுவலக நேரங்களில், உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப்பெற்றுக் கொள்ள முடியும் என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (க)



# சேதமடைந்த வீதியை சீரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

வடமராட்சி கிழக்கு மாமுனையிலிருந்து தம்பகாமம் ஊடாகப் பளை செல்லும் சுமார் ஐந்து கிலோ மீற்றர் நீளமான வீதியைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியானது பழுதடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் அதனூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாமுனையிலிருந்தும் சரி அதனை அண்டிய கிராமங்களான குடாரப்பு, செம்பியன்பற்று ஆகிய கிராம மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு ஏ-9 வீதியை அடைய மிகவும் அண்மித்த வழியாக இந்தப் பாதை காணப்படுகின்றது.

இதனைவிட கடல் இடர்களின்போதும் மிக விரைவாக மக்கள் சொற்ப நேரத்துக்குள் இடங்களைவிட்டு வெளியேற்றவும் இந்தப் பாதையே மிகவும் கிட்டிய பாதையாகவும் காணப்படுகின்றது.

மாமுனை- தம்காமம் பளைப் பாதை ஆற்றை மறித்து போடப்பட்ட பாதையாகும். இந்தப் பாதையில் ஆற்றுப் பகுதியில் மட்டும் நான்கு பாலங்கள் காணப்படுகின்றன. இந்தப் பாலங்களுக்கு அண்மையாக உள்ள இடங்களில் உள்ள வீதியின் பாதையின் அளவு வீதியின் அரைவாசியைவிடக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனூடாக மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடியே பயணத்தில் ஈடுபடுகின்றனர். மேலும் தொடர்ந்து இவ்வாறே இருக்குமானால் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

ஆற்றை மறித்து ஆற்று மணலால் போடப்பட்ட இந்த வீதியில் ஆற்றுப் பகுதியாக உள்ள சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரமும் ஆற்று நீரால் அரிக்கப்பட்டு அவையும் சிறிதாகியுள்ளது. எனவே மக்களின் போக்குவரத்தையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இந்த வீதியைச் சீரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஜ-70)

# வரணி இடைக்குறிச்சியில் மூன்று திறப்பு நிகழ்வுகள்

கொடிகாமம், செப்.6

புதிதாக அமைக்கப்பட்ட பனைசார் உற்பத்தி நிலையம், சீரமைப்புச் செய்யப்பட்ட நவா சனசமூக நிலையம் மற்றும் தார் வீதியாக மாற்றப்பட்ட கரம்பைக்குறிச்சி- இடைக்குறிச்சி ஊரெல்லை வீதி ஆகியவற்றின் திறப்பு நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வரணி, இடைக்குறிச்சி மேற்கில் இடம்பெறவுள்ளன.

நவா சனசமூகத் தலைவர் சி.சீவரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-159)

# கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி பெருகவேண்டும்

## கூட்டுறவு ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்ப்பாணப்பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில்புதிய முயற்சிகள், உற்பத்திகள் இடம்பெறவேண்டும். செயற்பாடுகள் முன்னோக்கியவையாக அமைய வேண்டும். அப்போதுதான்சங்கம் வளர்ச்சியடையும்என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.



யாழ்ப்பாணப் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சங்கத்தின் பணியார்களுடன் நேற்று நடைபெற்றது.

அதில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்தச் சங்கம் வளம்மிக்க சங்கமாக செயற்படுவதற்குப் பணியாளர்கள்எவரும்முன்வர வேண்டும். சங்கத்தின் செயற்பாடுகள் அதிகரிக்கப்படும் போது வியாபார நடவடிக்கையும் அதிகரிக்க வேண்டும். புதிய முயற்சிகள் அபிவிருத்திகள் என்பன முன்னோக்கியசெயற்பாடாகஅமைய வேண்டும். பணியாளர்களின்கொடுப்பனவுமற்றும் ஆளணி விடயங்களில் திணைக்களம்முக்கியகவனம் எடுக்கும் - என்றார்.

வடக்குமாகாணகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் சென்ற கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் சங்கச் செயற்பாடுகள்மற்றும்குறைபாடுகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.

காலை9மணிக்குஆரம்பமான கலந்துரையாடல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது. (து-17)

# ரூ.4 மில்லியனில் இரு சபைகளுக்கு மின்குமிழ்கள்

## சரவணபவன் எம்.பி. நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி,செப்.6

துரிதகிராமியஉட்கட்டமைப்புமேம்பாட்டுத் திட்டத்தில், நாடாளுமன்றஉறுப்பினர்ஈ.சரவணபவனின் 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில்கொள்வனவுசெய்யப்பட்டஒரு தொகுதி மின்குமிழ்கள் உரியவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரிநகரசபைமற்றும்சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் குறித்த மின்குமிழ்கள் கையளிக்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபைக்கு 50 மின்வலுள்ள (வோட்ஸ்) 77மின்குமிழ்களும், 30மின்வலுவுள்ள 37 மின்குமிழ்க ளும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு 30 மின்வலு கொண்ட 639 மின்குமிழ்களும், 50 மின்வலு கொண்ட 150 மின்குமிழ்களும் கையளிக்கப்பட்டன. (க-9)

# விவசாய கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.6

விவசாய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சிஎதிர்வரும்17ஆம் திகதிதொடக்கம்20ஆம் திகதிவரை திருநெல்வேலி விவசாயபயிற்சிப் பாடசாலையில்நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்போம்'என்னும்தொனிப் பொருளில் கண்காட்சி நடைபெறவுள்ளது.

காட்சிக்கூடங்களை மாணவர்கள், விவசாயிகள்மற்றும்அரசஅலுவலர்கள், பொதுமக்கள் பார்வையிட்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-9)

# முதியோர் சங்கத்தின் மாதாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.6

கோப்பாய் வடக்கு, முதியோர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும் என்று சங்கம் அறிவித்துள்ளது. (க)

## மீனவர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு

# சேந்தாங்குளத்தில் விரைவில் அமையவுள்ளது வெளிச்சவீடு

யாழ்ப்பாணம்,செப்.6



மீனவர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக சேந்தான்குளத்தில்வெளிச்ச வீடு அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நடப்பட்டுள்ளது. இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தின் 'கிராம சக்தி' வேலைத்திட்டத்தின் கீழ் கிராம மக்கள் மற்றும் இளைஞர் கழகத்தின் 13 லட்சம் ரூபா நிதியில் வெளிச்சவீடு அமைக்கப்படவுள்ளது என்று கழகத்தினர் தெரிவித்தனர்.

இளவாலை, சேந்தாங்குளம் பகுதியல்கடற்றொழில் செய்யும் மீனவர்களின் நன்மை கருதி இந்த வெளிச்ச வீடு அமைக்கப்படவுள்ளது!

சேந்தாங்குளம், மாதகல், குசுமான்துறை ஆகிய மீன்பிடி வாடிகளிலிருந்து, தொழிலுக்காகக் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் சரியான குறிகாட்டியின்றி திசைமாறி வேறு இடங்களுக்குச்செல்லும் அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் முழு முயற்சிகளை மேற்கொண்ட இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகம், யாழ்ப்பாணம் கரையோரக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் வலி.வடக்குப் பிரதேச சபையின் அனுமதியுடன் வெளிச்ச வீட்டை அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வில், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைகள் உதவிப்பணிப்பாளர், தெல்லிப்பழை இளைஞர் சேவைகள் அதிகாரி, கிராம அலுவலர், கடற்கரையோரக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள், மதகுருமார், கிராம மக்கள், மீனவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-222)

# பனையில் ஏறும் இயந்திரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்

## பனை அபிவிருத்திச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

பனை மரத்தில் ஏறும் இலகுரக இயந்திரங்களைப் பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று அறிமுகம் செய்துள்ளது. அரியாலையில் நடைபெற்ற இந்த அறிமுக நிகழ்வில் பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் 19 பேருக்கு இலகு ரக பனை ஏறும் இயந்திரத்தைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.



சீவல் தொழில் செய்பவர்கள் பனைகளில் இலகுவாக ஏறித் தொழில்செய்துவிட்டு இலகுவாக இறங்குவதற்காக இந்தக் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பயிற்சி வழங்கும் நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன், பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன், பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்பொதுமுகாமையாளர் பொ.செல்வராசா, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். வடக்கின் மறுவாழ்வு சீரமைப்பு மீள்குடியேற்றஅமைச்சின் உதவியுடன் பனை மரத்தில் ஏறும் இலகு இயந்திரங்கள் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கொழும்பிலுள்ள 'மரம் ஏறும் இயந்திரம்' என்ற அமைப்பு இந்த இலகு இயந்திரங்களையாழ்ப்பாணத்தில் வழங்கவுள்ளது என்று அந்த அமைப்பின் மாவட்டஇணைப்பாளரும் முன்னாள் துணைவேந்தரு மான பேராசிரியர் எஸ். மோகனதாஸ் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 7ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள சிறிலங்காஎன்ரபிறைஸ்கண்காட்சியில் வைத்து தலைமைஅமைச்சர்மரம் ஏறும்சுமார்20இயந்திரங்களைவழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

மரம் ஏறும் இலகு இயந்திரங்கள் ஒவ்வொரு பனை-தென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் வழங்கிவைக்கப்படும். இந்த இயந்திரங்களைக் கொண்டு சகல சங்கங்களும் தமது அங்கத்தவர்களுக்குப்பயிற்சிவழங்குவார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-17)



# ஓட்டோவில் கடத்தப்பட்ட கஞ்சா மீட்பு

காரைநகர், செப்..6

முச்சக்கர வண்டி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 2.16 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படைமற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் ஒருங்கிணைந்து காரைநகர் பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கஞ்சா மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான நின்ற முச்சக்கர வண்டி ஒன்றைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, அதில் பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா ஆகியவை வைக்கப்பட்டிருந்தது என்று கடற்படையினர் தெரிவித்தனர். சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். முச்சக்கர வண்டி மற்றும் கஞ்சா ஆகியவைமேலதிகவிசாரணைகளுக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

(க-21)

# விவசாயிகளுக்கு உறுப்புரிமை படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.6

வரணி மாசேரி விவசாய அமைப்பின் அங்கத்தவர்களுக்கான உறுப்புரிமைப் படிவம் கடந்தவாரம்தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று அமைப்பின் செயலர் தெரிவித்துள்ளார்.

இதுவரை விண்ணப்பப்படிவத்தைப்பெற்றுக் கொள்ளாதவர்கள்செயலரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சகல அங்கத்தவர்களும்படிவத்தில்கேட்கப்பட்டுள்ளவிவரங்களை முழுமைப்படுத்தி ஒப்படைக்குமாறுகேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரைஏக்கர்வரிசெலுத்தாதவர்கள்சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் வரியைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-122)

# ஓய்வூதிய ஆவணங்கள் கையளிப்பு

சாவகச்சேரி,செப்.6

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் 'சேவா மங்கலம்'திட்டத்தின்கீழ், ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெற்ற கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியை திருமதி மகாராணி சிவானந்தனுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்கள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் ஆசிரியரிடம் ஆவணங்களைக் கையளித்தனர். குறித்த ஆசிரியர் சேவையில் அரும்பணியாற்றிமைக்காக வலயத்தினரால் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

தென்மராட்சிக்கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு, அந்த மாதமே ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்களைக் கையளிக்கும் செயற்றிட்டம் வலயக் கல்விப் பணிப்பாளராக் கடமையாற்றிய கிருஷ்ணகுமார் காலத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. (க-9)

# பிறந்த தினமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,செப்.6

பௌராணிகவித்தகர் சிவசிறி வ.குமாரசுவாமிக் குருக்களின் நூறாவது பிறந்ததின நிகழ்வும், "குமாரதீபம்" மலர் வெளியீடும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டி சைவத்தமிழ்வித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் சிறிசாயி கலைக்கழக பணிப்பாளரும் யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரி இசைத்துறை விரிவுரையாளருமான திருமதி சி.வை.குநேசன் தலைமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடக்கு மாகாணத்தில் இடியுடன் கூடிய மழை!

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 6

அடுத்தசிலநாள்களில்வடக்கு மாகாணத்தில் இடியுடன்கூடிய மழை பெய்யும். காற்றின் வேகம் சுமார் 50 கிலோமீற்றருக்கும் அதிகமாகக் காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் சிறிதளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும்சிலஇடங்களில்பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லதுஇடியுடன்கூடியமழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.



வடக்கு மாகாணத்தில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடியமழைபெய்யும்வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல்தாக்கங்களினால்ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளைஎடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்- என்றுள்ளது. (ம)

# கண், காதுக்கான இலவச பரிசோதனை

யாழ்ப்பாணம்,செப்.6

கண் மற்றும் காதுக்கான இலவச பரிசோதனை நாளைமறுதினம் பருத்தித்துறை வீ.எம். வீதியில் அமைந்துள்ள'ஞானாலயத்தில்' காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்குமாகாணஓய்வுநிலை வங்கியாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம்விஷன் கெயர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி பெற விரும்புபவர்கள் 10 வீதவிலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிரவலுக்கு அனுமதி வழங்கும்போது மக்களின் அபிப்பிராயமும் அவசியம்

*மடுவீதி ஜோதிநகர் மக்கள் வலியுறுத்து*

மன்னார், செப். 6

மன்னார், மடுவீதி ஜோதிநகர்ப் பகுதியில் கிரவல் அனுமதி வழங்கும்போது, குறித்த பகுதி மக்களிடமும் அபிப்பிராயங்களைக் கேட்ட பின்னரே அனுமதி வழங்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிராமத்துக்கு அருகில் கிரவல்கள் அகழ்ந்து, அந்தப் பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

அண்மையில் குஞ்சுக்குளம் பகுதியில் குழந்தை ஒன்று கிடங்கினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளது. இவ்வாறான செயல் மீண்டும் தொடரலாம். புதிதாகப் போடப்பட்ட வீதிகளுக்குப் பாதிப்பு ஏற்படும். மழைகாலங்களில் கிடங்குகளில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும் காடுகள் நிறைந்த பகுதி என்பதாலும் நுளம்புப் பெருக்கத்தால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எமது கிராமத்து எல்லைகளுக்குள் கிரவல் அகழ்வதற்கான அனுமதி வழங்குவதாயின் பொதுமக்களுடன்கலந்துரையாடியபின்னர்அனுமதி வழங்குங்கள். அல்லது எமது கிராமத்து எல்லைகளுக்கு அப்பால் அனுமதி வழங்குங்கள் என்று மடுவீதி ஜோதி நகர் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கிரவல் அகழ்வு தொடர்பாகப் பெயர் குறிப்பிட விரும்பாத திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

கடந்தமாதம்19ஆம்திகதி மன்னார் மாவட்டச்செயலகத்தில்நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நானாட்டான் பிரதேசசெயலர், நானாட்டான்பிரதேச சபைத் தவிசாளர் உட்பட திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடி கிரவல் அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், சம்பந்தப்பட்ட ஊர்ப் பொதுமக்கள் தங்களிடமும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)



## முதியோர் பற்றிய உளப்பாங்கை சிறார்களிடம் ஏற்படுத்தவேண்டும்

*சமூகசேவை அலுவலர் வலியுறுத்து*

கிளிநொச்சி, செப். 6

இளம் சமுதாயத்தினரிடம் முதியோர் மீதான அன்பு,கருணைபோன்ற உளப்பாங்கை ஏற்படுத்தும் நோக்கில் மாணவரிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒரு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுத் தனிப்பட்ட மற்றும் குழுநிலைப்போட்டிகளாக இவைமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வவுனியா மாவட்ட சமூக சேவைஅலுவலர்செ.சிறிநிவாசன் தெரிவித்தார்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி பா.கமலேஸ்வரிதலைமையில் நடைபெற்ற முதியோருக்கு முக்கியத்துவம் அளிக்கும்திட்டநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அருகிவரும் பாரம்பரியங்களையும் முதியோர் மகத்துவம் பற்றிய அறிவையும் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு வழங்கிச்சிறுவர்களுக்கும்முதியோர்களுக்குமிடையே அன்பான உறவைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு முதியோர்செயலகம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

விரைவாக அதிகரித்து வரும் முதியோர் தலைமுறைகள்எதிர்காலத்தில் நாட்டுக்குச் சிறந்த வளமாக மாற்றப்படவேண்டும். இளந்தலைமுறையினர் மற்றும் குழந்தைகளின் மனநிலைகளில் முதியோர் மீது அன்பு, கருணை போன்ற எண்ணங்களை விதைப்பதன்மூலம் சிறுவர்மன நிலைகளில் மாற்றங்களைக்கொண்டு வந்து முதியோரை மதிக்கும் எதிர்கால வளமான சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். அதற்கு இது பற்றிய போட்டிகள் வழி வகுக்கும்.

"மூத்தோர் வாயும் முதுநெல்லிக்காயும்முன்னர் கசக்கும் பின்னர் இனிக்கும்" என்பதையும் இளைய சமூகம் புரிந்து கொண்டால் பல சமூகப் பிரச்சினைகள் தீர்ந்து விடும்.இளந்தலைமுறையினரை நல்வழிப்படுத்துவதில் மூத்தோரின் கைப்பிடியே நந்தா விளக்காக இருக்கும்.

சமூகவலுவூட்டல் அமைச்சும்முதியோருக்கான தேசிய செயலகமும் நாடுமுழுவதும் வருடாந்தம் பாடசாலை மாணவரிடையே கலை, இலக்கியம், ஓவியம், சஞ்சிகை, ஆக்கப்போட்டிகளை நடத்தி பெறுமதி மிக்க பரிசில்கள், சான்றிதழ்களைவழங்கிமாணவர்களை முதியோர் மீதான கரிசனை கொண்டோராக மாற்ற முயன்று வருகிறதுஎன்றுமேலும்அவர் தெரிவித்தார். (த-222)

## ஆன்மிக பயணம்

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கோணாவில் கிராம முதியோர் சங்க உறுப்பினர்கள்50பேர் ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். இவர்கள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருத்தலங்களுக்கு நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம், கரைச்சி பிரதேச செயலர் ஊடாக இந்தப் பயண ஏற்பாட்டைச் செய்துள்ளது.(ஐ-222)



மன்னார், நானாட்டான் சிறி செல்வமுத்து மாரியம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அன்றைய தினம் இரவு நேரப் பூசையில் அம்பாள் வீதி வலம் வரும் காட்சி. (ஐ-213)

## திருக்குறள் கலைத்திறன் தேர்வுப் போட்டிகள்

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் கலைத்திறன் தேர்வுப் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில்பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 15ஆம்திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறு தமிழ் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.(ஐ-222)

## வீதிச் சீரமைப்புக்கென கொட்டப்பட்ட மண்ணிலிருந்து கைக்குண்டு மீட்பு

மன்னார், செப்.6

வீதிச் சீரமைப்புக்கெனக் கொட்டப்பட்ட கிரவல் மண்ணில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

மன்னார்,தலைமன்னார்முதன்மை வீதி, ஓலைத் தொடுவாய்ப் பகுதியில் வீதி சீரமைப்பதற்காகப் பறிக்கப்பட்டிருந்த மண்ணிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.அந்த மண் செட்டிகுளம் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிரவல் மண்ணைப் பரவும் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் அதிலிருந்து கைக்குண்டு வெளிவந்ததை அவதானித்துள்ளனர். உடனடியாக மன்னார்ப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்குவிரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-56)



## பெற்றோரின் தலைக்கவசத்தைக் கழற்றி மாணவருக்கு அணிவித்தனர் பொலிஸார்

*வவுனியாவில் நேற்றுச் சம்பவம்*

வவுனியா, செப். 6

பாடசாலைக்கு மாணவர்களைத் தலைக்கவசம் இன்றி அழைத்துச் சென்றபொற்றோர்களைவழிமறித்த பொலிஸார், பெற்றோர் அணிந்திருந்த தலைக்கவசத்தைக் கழற்றி மாணவர்களுக்குஅணிவித்துமாணவர்களைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளனர்.

இந்தச்சம்பவம்வவுனியாமுதன்மை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

பெற்றோர்கள் சிலர் மாணவர்களுக்குத் தலைக்கவசம் அணிவிக்காது உந்துருளிகளில் பாடசாலைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

இந்த நிலையிலேயே பெற்றோர்களின் தலைக்கவசத்தைக் கழற்றி மாணவர்களுக்கு அணிவித்து மாணவர்களைப்பாதுகாப்புடன்பாடசாலைக்கு அழைத்துச்செல்லுமாறு போக்குவரத்துப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனால் பெற்றோர்கள் சிலர் விசனம்தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)



## 5 லட்சம் ரூபாவில் மடப்பள்ளி சீரமைப்பு

கிளிநொச்சி, செப். 6
பளை, வேம்பொடு கேணி கண்ணகி அம்மன் ஆலய மடப்பள்ளி 5 லட்சம் ரூபாவில் சீரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் இது சீரமைக்கப்பட்டிருந்தது. அதைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் நேற்றுத் திறந்து வைத்தார்.
போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் காணப்படுகின்ற இந்த ஆலயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது, பழமை வாய்ந்தது. இறுதிப் போர்க் காலப்பகுதியில் முன்னரங்கப் பகுதியாக அமைந்த இந்தப் பகுதியில் இன்னமும் மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெறவில்லை.
நிகழ்வில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் உப தவிசாளர் காயன் மற்றும் உறுப்பினரான கோகுல்ராஜ் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவலர், இந்து கலாசார அலுவலர், அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர், ஆலய நிர்வாகத்தினர் கலந்துகொண்டனர். (த-6)

# கிளிநொச்சியில் 4,207.2 ஏக்கரை படைத்தரப்பு பிடித்துவைத்துள்ளது

### விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறீதரன் எம்.பி. ஆளுநர் ராகவனுக்கு அறிக்கை

கிளிநொச்சி, செப். 6
கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து 207.2 ஏக்கர் காணிகளை பாதுகாப்புத் தரப்பு கையகப்படுத்தி வைத்திருக்கின்றது. இவற்றை விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி காணிகள் தொடர்பான அறிக்கை ஒன்று வடக்கு ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கு அறிக்கையை சில நாள்களுக்கு முன்னர் அனுப்பியுள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தற்போதைய தரவுகளின் அடிப்படையில் 2ஆயிரத்து119.07 ஏக்கர் அரச காணிகளும் 2ஆயிரத்து 088.13 ஏக்கர் தனியார் காணிகளும் உள்ளடங்கலாக 4ஆயிரத்து 207.2 ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.
இராணுவம், பொலிஸ், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், கடற்படை உள்ளிட்ட தரப்புக்களால் இந்தக் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இறுதிப்போருக்கு முற்பட்ட காலத்தில் இந்தக் காணிகளை பொதுமக்களும், அரச திணைக்களங்களும், விடுதலைப் புலிகளும் பயன்படுத்தியிருந்தனர். இந்தக் காணிகளே மாவட்டத்தின் நகர வடிவமைப்பைக் கட்டமைப்பதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவைகளை மக்கள் மயப்படுத்துவதற்கும் இடையூறாக உள்ளன. காணிகளை அபகரித்து 10 வருடங்களாகியும் விடுவிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்காதிருப்பது, மாவட்டத்தின் அனைத்து துறைசார் அபிவிருத்திகளையும் கேள்விக்குட்படுத்துகின்ற செயல். இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)



## துப்புரவு பணி

மன்னார்,செப். 6
மன்னார் எருக்கலம்பிட்டிவித்தியாலயசுற்றுச் சூழல் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது. பாடசாலையின் 1980 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பழைய மாணவர்கள் இந்தத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். துப்புரவுப்பணியில் பழைய மாணவர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், சுகாதார திணைக்கள ஊழியர்கள், சுங்க இலாக அதிகாரிகள், வர்த்தகர்கள், சட்டத்தரணிகள், கடற்றொழிலாளர்கள் ஆகியோர் ஈடுபட்டனர். (ஐ-60)

# மரக்குற்றிகளைக் கடத்திய வாகனம் முள்ச்சட்டகம் இட்டு மடக்கப்பட்டது

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, செப். 6
சட்டவிரோதமாக முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற கப்ரக வாகனத்தைச் சிறப்பு அதிரடிப்படையினர் துரத்திச் சென்று இரும்பு முள்ச் சட்டகம் வீசி மடக்கிப்பிடித்தனர். இந்தச் சம்பவம் வவுனியா ஓமந்தைபால மோட்டைப் பகுதில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. காட்டுப்பகுதியூடாக சட்டவிரோதமாக மரக்குற்றிகள் கடத்திச் செல்லப்படுகின்றன என்று கிடைத்த தகவலின்படி வவுனியா சிறப்பு அதிரடிப் படையினர் குறித்த பகுதியில் தேடுத





லில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது கப்ரகவாகனம் தப்பிச் சென்று கொண்டிருந்தது. அதைச்சிறப்பு அதிரடிப்படையினர் துரத்திச் சென்றுதிரென்றுமுள்ச் சட்டகம் வீசினர். அந்த முட்களில் கப் வாகனரயர்கள் ஏறியதும் காற்றுப்போய்விட்டன. எனினும் அதில் பயணித்த இருவரும்காட்டுப்பகுதிக்குள் தப்பிச் சென்றுவிட்டனர்.
கப்ரக வாகனத்தை மீட்ட அதிரடிப் படையினர் அதிலிருந்து 7 அடி நீளமுடைய 12 முதிரைக்குற்றிகளைக் கைப்பற்றினர். அவற்றையும் வாகனத்தையும் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.
விசாரணைகள் நடக்கிறது என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-110,222)

# துப்பாக்கிக்குண்டு பாய்ந்து பண்ணையாளர் உயிரிழப்பு

### கொலையா? உயிர்மாய்ப்பா? என்று விசாரணை

மட்டக்களப்பு, செப். 6
துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நிலையில் பண்ணையாளரின் சடலத்தை நேற்று மீட்டுள்ளதாக வெலிக்கந்தப் பொலிஸார் தெரிவித்தனர்.
வெலிக்கந்தைப் பொலிஸ் பிரிவிலுள்ள தேசிய பண்ணை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணையில் அவர் பொறுப்பாளராகக் கடமையாற்றிவந்துள்ளார். இந்தநிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.
கேகாலைப் பகுதியைச் சேர்ந்த டி.எம். தர்மரெத்தின (வயது-48) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.
அவர் அனுமதி பெற்று துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர், தான் வைத்திருந்த துப்பாக்கியால் உயிர் மாய்த்தாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பில் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## பூந்தோட்டம் அகத்தியார் வீதி சீரமைப்பு

வவுனியா,செப். 6
வவுனியா, பூந்தோட்டம் அகத்தியார் வீதி கிரவல் இடப்பட்டுச் சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.
இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார். தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதியின் ஒழுங்கமைப்பில் வீதிச் சீரமைப்புப் பணிகள் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-110)



# கல்முனை வடக்கை தரமுயர்த்துவதில் அரசியல்வாதிகள் சதி!

### ரன்முத்துகல சங்க ரத்ன தேரர் தெரிவிப்பு

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படுவதில் சதிச் செயல்கள் உள்ளன. சில அரசியல்வாதிகள் சுயநலனுக்காக மக்கள் உரிமையுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர் என கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்தார்.
கல்முனை உப பிரதேச செயலக பிரிவு தரமுயர்த்துவது ஏன் காலதாமதமாகின்றது என ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்



கண்டவாறு குறிப்பிட்டார்.
கல்முனை வடக்கு பிரதேச செயலகம் உரியமுறையில் தரம் உயர்த்த கோரிக்கை விடுத்து நாங்கள் உண்ணாவிரதப்பில் ஈடுபட்டோம். இதில் எந்தவித அரசியல் நோக்கங்களும் இருக்கவில்லை. மக்களுக்கான சேவைகள் சிறப்புடன் நடைபெற வேண்டும். அவர்கள் சுதந்திரமாக தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இவற்றை வலியுறுத்தியே நாங்கள் உணவொறுப்பில் ஈடுபட்டோம். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படுவதில் சில அரசியல்வாதிகள் சுயநலனுக்காக மக்கள் உரிமையுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.
அரச தலைவர், தலைமை அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அனைவரும் ஒரே மேசையிலிருந்து கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் குறித்துப் பேசி தீர்க்கமான முடிவை எட்டவேண்டும். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தும் வரை நான் கல்முனை பிரதேச மக்களுடன் துணையாக இருப்பேன். அவ்வாறு தரம் உயர்த்தி கொடுக்காவிடில் எந்தவொரு அரசியல்வாதியும் என்னைச் சந்திக்க வரவேண்டாம் - என்றார். (ம)

# மனன போட்டி பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்ப்பாணம்,வண்ணை சாந்தையர்மடம் சிறி கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை தின திருமுறைமனனப் போட்டிக்கானபரிசளிப்புநிகழ்வை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகசிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை அதிபர் ந.கிருஷ்ணகுமார் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குபரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு: தரம் ஒன்றில் முதலாம்இடம்சி.சந்தோஷிகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), 2 ஆம் இடம் கி.சியானி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி),3 ஆம் இடம் தே.அமிர்தன் (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறி) ஆகியோரும் -தரம் இரண்டில்முதலாம்இடம் கு.அக்சயா(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),2 ஆம் இடம் ச.மகீசன் (இந்து ஆரம்பப் பாடசாலை),3 ஆம் இடம் ஜெ.காருண்யா (கொக்குவில்இந்துஆரம்பப் பாடசாலை) ஆகியோரும் தரம் மூன்றில் முதலாம் இடம் க.லக்ஸ்சிகர் (உரும்பிராய்கற்பகவிநாயகர் அறநெறி),2 ஆம் இடம் ப.டிதுசன்(இந்து ஆரம்பப் பாடசாலை), 3 ஆம் இடம் இ.ஜக்ஷின் (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை) ஆகியோரும் - தரம் நான்கில் முதலாம் இடம் சி.மனஸ்வினி(கொக்குவில்இந்து ஆரம்பப் பாடசாலை), 2 ஆம் இடம் க.ஆதவன் (உரும்பிராய்கற்பகவிநாயகர் அறநெறி),3ஆம் இடம்க.சதுஸ்ரிகா (ஏழாலை கருணாகரப் பிள்ளையார் அறநெறி) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர். (ஐ)

# இரசாயனம் தெளித்த உற்பத்திகளை தாமதித்து சந்தைகளுக்கு விடுங்கள்

## விவசாயிகளுக்குத் திணைக்களத்தினர் கண்டிப்பான அறிவுரை

வவுனியா, செப். 6

மரக்கறிச் செடிகளின் மீது வீசப்படும் சிலவகை இரசாயன மருந்துகள் சில நாள்கள் செல்ல வீரியத்தன்மை குறைந்துவரும். எனவே வீரியம் குறைந்தபின்னரே அதனைச் சந்தையில் விற்பனை செய்வதற்கு விவசாயிகள் முயற்சிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் நோய்த்தாக்கத்தை ஓரளவு தடுக்க முடியும்.

இவ்வாறு வவுனியா விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருள்கள் அபிவிருத்தி நிலையப் பிரதிப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார். வவுனியாவில்அண்மையில் நடைபெற்ற சேதன விவசாயம் தொடர்பான நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்காலத்தில் அளவற்ற நஞ்சுப் பாவனை காரணமாக இனம்புரியாத பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருகின்றோம். நாடு முழுவதும் புற்றுநோய் மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்கு மூல காரணம் விவசாயச் செய்கையில் இரசாயனங்களின் அதிகரித்த பாவனையே.

### செண்பகங்களும் அழிவு

அளவற்ற இரசாயனப் பாவனையால் மண் வளம், நீர் வளம், வழிமண்டலம் என்பன கடுமையாகப் பாதித்துள்ளன.

பூச்சியினங்களும் அழிவைச் சந்தித்துள்ளன. அவற்றை உண்கின்ற பறவைகள்கூட அழிவடைந்துவருகின்றன. செண்பகப் பறவையின் அழிவுக்கும் இது ஒரு காரணம்.

### சேதன விவசாயத்துக்கு திரும்பவேண்டும்

எனவே இயற்கையை மாற்றியமைத்ததன் காரணமாக நாம் மீளவும் சேதன விவசாயத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, சேதன விவசாயத்தை நோக்கிச் செல்வதற்கு முன்னர் குறைந்தபட்சம் நஞ்சற்ற மரக்கறிகளையாவது உற்பத்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

### நுகர்வோரே மனம்மாறுங்கள்!

மறுபுறம் சேதன விவசாயத்தை மேற்கொள்வதற்கான உள்ளீடுகளைப் பெறுவதில் விவசாயிகள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிமுறைகளை உருவாக்குவதன் மூலம் சேதன விவசாயத்தை ஊக்கப்படுத்தலாம்.

நுகர்வோர் தமது எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

உதாரணமாக ஒரு தொலைபேசியின் விலை 50 ஆயிரம் ரூபா என்றால் அதன் விலை குறைக்காமல் கொள்வனவு செய்வோம்.

ஆனால் சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 40 ரூபா என்றால் எவரும் வாங்கமாட்டார்கள். அந்த விலையைக்கூட விவசாயிகள் தீர்மானிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

எந்த ஒரு பொருளும் விலை தீர்மானிக்கப்பட்ட பின்னரே உற்பத்தி செய்யப்படுகின்றது. அந்த விலை உற்பத்தியாளர்களாலேயே தீர்மானிக்கப்படும். ஆனால் விவசாய உற்பத்திகளின் நிலையோ வேறு.

எனவே சேதன விவசாயிகளுக்கான ஊக்குவிப்புக்களைச் செய்வதுடன், சேதன உற்பத்திகளுக்கான உள்ளீடுகளை வழங்கும் மையங்கள் உருவாக்கப்படுவதுடன், நுகர்வோர் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

அப்போதே சேதன உற்பத்திகளை அதிகரித்து நோயற்ற சமூகத்தை உருவாக்கமுடியும். - என்றார். (த-110)

# பாடசாலைகளை அமைக்க ஜப்பான் அரசால் நிதியுதவி

கொழும்பு, செப். 6

அம்பாறை மாவட்டத்தில் சிறப்புத் தேவையுடைய சிறார்களுக்கான பாடசாலையொன்றை அமைக்கும் பணிகளுக்காக ஜப்பான் அரசு 15 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

அம்பாறையிலேயே இந்தப் பாடசாலைஅமைக்கப்படவுள்ளது. இந்த நிதியுதவி வழங்கலுக்காக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியமா மற்றும் வதிவிட, வளங்கள் மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஏ.கே.எம்.சிஹாப்தீன் ஆகியோருக்கிடையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட ஜப்பானிய தூதுவர், 'சிறப்புத் தேவையுடைய சிறார்களுக்கான பாடசாலைக் கட்டத்துக்கான நிதியுதவியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். புதிய கட்டடம் அமைக்கப்படுவதன் ஊடாக சுமார் 60க்கும் மேற்பட்ட சிறப்புத் தேவையுடைய சிறார்கள் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள்.

2012ஆம் ஆண்டின் தரவுகளின்படி இலங்கையில் 2 வீதமான விசேட தேவையுடைய சிறார்கள் இருக்கும் அதேவேளை, அவர்களின் 75 சதவீத மானவர்களே பாடசாலைக் கல்வியைப் பெறுகின்றார்கள்.

ஏனையோர் போதிய வசதி இன்மையாலும், தவறான புரிதல்களா லும் கல்வியைத் தொடர முற்படுவதில்லை. எனவே இந்நிதியுதவியின் ஊடாக சமூகம் சார்ந்த விருத்தியை ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம்' -என்றார். (ம-31)

# ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பயனாளிகளைத் தெரிய புதிய நடவடிக்கை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பயனாளிகளை தெரிவு செய்யும் நடைமுறையில் திருத்தத்தை மேற்கொண்டு, குறைந்த வருமானத்தைக்கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளின் பெரும்பாலானவர்களுக்கு 2ஆம் நிலை கல்வி வசதிகளைசெய்து கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. தற்போது 15 ஆயிரம் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது. மாணவர் எண்ணிக்கையை 20 ஆயிரம் வரையில் அதிகரித்து இவர்களுக்கானமாதாந்தகொடுப்பனவை 500 ரூபாவில் இருந்து 750 ரூபா வரை அதிகரிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. (ம)



# ரூ.5 மில்லியனில் அபிவிருத்திகள்

மன்னார்,செப்.6

மன்னார் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்ட மூர்வீதி கிராமத்தில் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்திப் பணிகள் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கைத்தொழில், வர்த்தகம், மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மன்னார் நகர சபை உறுப்பினர் உவைசூல் ஹர்னி தலைமையில் ஆரம்பித்து வைக்கபபட்டன. பாலர் பாடசாலைக் கட்டம், மையவாடிக்கான உள்ளக பாதை மற்றும் மின் விளக்கு பொருத்தல் , கிறவல் பாதை அமைத்தல் போன்ற திட்டங்கள் ஆரபித்து வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், அமைச்சரின் பிரத்தியேக செயலருமான றிப்கான் பதியுதீன் கலந்து சிறப்பித்தார். மேலும் நிகழ்வில் மன்னார் பிரதேச சபை தவிசாளர் என்.முஜாஹிர் , தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாண பணிப்பாளர் என்.எம். முனவ்வர் , அமைச்சரின் மன்னார் மாவட்ட திட்ட இணைப்பாளர் எம்.முஜிபுர் ரகுமான் , மன்னார் நகர சபை உறுப்பினர்களான என். நகுசீன் , திருமதி டிலானி குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-56)

# சகல வேலையில்லா பட்டதாரிகளுக்கும் வேலைகளை வழங்குமாறு ஆர்ப்பாட்டம்




வெளிவாரிப்பட்டதாரிகள் உட்பட சகல வேலையில்லாப் பட்டதாரி களுக்கும் தொழில்வாய்ப்பை வழங்குமாறும் செயற்றிட்ட அதிகாரிகளுக்கான நியமனத்தை உகந்த முறையில் வழங்குமாறும் கோரி வெளிவாரிப்பட்டதாரிகள் சங்கமும் வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கமும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தன.

இதன்போது அமைச்சுக்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன், ஆர்ப்பாட்டகாரர்கள் அமைச்சின் முன்பாக தடுத்து நிறுத்தப்பட்டனர்.

வெளிவாரிப்பட்டதாரிகளின் உரிமைக்காகவே குரல் கொடுக்கின்றோம். அரசு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் எனப் பொறுமையாகக் காத்திருந்தோம். அரசுக்கு காலஅவகாசம் அளித்திருந்தோம். இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசியல்வாதிகளிடம் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். எனினும் எந்தப் பயனும் இல்லை - என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ம-31)



## பதவி நிலை அலுவலர்கள் கொழும்பில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,செப். 6

12 சேவைகளைச் சேர்ந்த பதவி நிலை அலுவலர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள ஆணைக்குழுவின் கொடுப்பனவு மறுசீரமைப்பில் தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை நீக்கக் கோரியே அலுவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா கல்வியியல் கல்லூரிகள் மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளைச் சேர்ந்த கல்வியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இருந்து ஊர்வலமாகச் சென்ற போராட்டக்காரர்கள், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர். (க)

## திண்மப்பொருள்முகாமைக்கு அரசால் புதிய கொள்கைகள்

கொழும்பு, ஓக. 6

திண்மப்பொருள்மற்றும்வாயுக்கழிவுப்பொருள்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு தேசிய கொள்கையை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்வது தொடர்பில் இதனுடன் தொடர்புடைய அனைத்துத்தரப்பினரதும் பொதுவான மற்றும் மாறுபட்ட பொறுப்பை அடையாளம் காண்பதற்கான தேவையும் உணரப்பட்டுள்ளது.

இவ்வாறு பொறுப்புக்கள் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அவற்றைக் கொண்டு கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக தேசிய கொள்கையை வெற்றிகரமாகநடைமுறைப்படுத்துவதற்காத்தேவையானசட்டக்கட்டமைப்புமற்றும்விதிகள்தயாரிக்கப்படவுள்ளன. அவை தாயாரிக்கப்பட்டதன் பின்னர் அந்த தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. (ம-61)

## கொள்ளையில் ஈடுபட்டவரென நபரொருவர் கைதானார்!

கொழும்பு, செப். 6

பேலியகொட பகுதியில் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை பேலியகொட மேல்மாகாண வடக்கு குற்றப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் வத்தளைப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ம-71)

## மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் மகிந்த மௌனித்து இருப்பது ஏன்?

### சு.கவின் பொதுச் செயலர் தயாசிறி கவலை தெரிவிப்பு

கொழும்பு, செப். 6

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் தேரதல்கள் ஆணையாளர் ஆர்வமாக இருக்கின்ற போதிலும் இது தொடர்பில் அவர் நீதிமன்றத்தை நாடாமல் இருக்கின்றமை கவலையளிக்கின்றது என்று தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் தோல்வியுற்ற பின்னர் தலைமை அமைச்சர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு இரு மாதங்களில் அறிக்கை சமர்ப்பிப்பதாகக் கூறப்பட்டபோதிலும் இது வரையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

எனினும் தேர்தல்கள் ஆணைகுழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் கோரிக்கைக்கு அமையவே அரச தலைவர் நீதிமன்றத்தை நாடினார். எனினும் அரச தலைவருக்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இனி எம் கையில் எதுவும் இல்லை. எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அரச தலைவர் தேர்தல் இடம்பெறவுள்ளது. அரச தலைவர் தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர், பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். இவை அடுத்தடுத்து குறுகிய கால இடைவெளிக்குள் இடம்பெறும் என்பதால் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியும் என்று நாம் நினைக்கவில்லை - என்றார். (ம-31)

## நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கேனும் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை

### கடந்த அரசே வழங்கியது என அமைச்சர் கிரியெல்ல கருத்து

கொழும்பு, செப். 6

எமது அரசால் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை. அதுதொடர்பில் உறுதியாகத் தெரிவிக்கின்றேன். ஆனால், கடந்தஅரசால்அதிகமானவர்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டிருந்தது என சபைமுதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூடியது. எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து. கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 உறுப்பினர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் இருப்பதாகவும் 75 பேருக்கு மண் வெட்டுவதற்கு மற்றும்விநியோகிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இருப்பதாகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உயர் நீதிமன்றில் தெரிவித்தார் என அரச பத்திரிகை ஒன்றில் முதலாவது பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஒருவர் உயர் நீதிமன்றில் பெயர் குறிப்பிடாமல் இவ்வாறு தெரிவித்திருப்பது நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களதும் மதிப்புக்குப் பாதிப்பாகும். இது தொடர்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பந்துல குணவர்த்தனதெரிவித்தார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, எமது ஆட்சியில் நாங்கள் மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரத்தை எவருக்கும் வழங்கவில்லைஎன்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும். ஆனால் கடந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது - என்று மேலும் குறிப்பிட்டார். (ம-71)

## பொதுமக்கள்ஜனநாயகமுன்னணியின் யாப்புசார் நடவடிக்கைகள் முழுமை

### டலஸ் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, செப். 6

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளைஇணைத்து பொதுமக்கள் ஜனநாயக முன்னணியைஉருவாக்குவதற்கான யாப்புசார் நடவடிக்கைகள் முழுமையடைந்துள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் இன்று அனைத்துத் தரப்பினராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. மாகாணசபைத் தேர்தலை மக்கள் மறக்கவேண்டும்என அரச தலைவர் குறிப்பிட்டுள்ளமை இந்த அரசின் ஜனநாயகக் கொள்கையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

சுதந்திரக் கட்சிக்கும், பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பான பேச்சு வெற்றிகரமாகமுன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. விரைவில் கூட்டணி விவகாரத்தில் ஒரு தீர்வு முன்வைக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் பொதுமக்கள் முன்னணி உருவாக்கத்துக்கான யாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளன. (ம-31)

# கோத்தபாய ராஜபக்சவைத்தான் தமிழர்கள் ஆதரிக்கவேண்டுமாம்

வவுனியா, செப். 6

பன்னாட்டு விசாரணை என்று எதுவும் நடக்கப்போவதில்லை. தமிழர்கள் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்க வேண்டிய தேவையுள்ளது என்று வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், தமிழர் சமூக ஜனநாயக் கட்சியின் செயலர் நாயகமுமான வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்சவின் கடந்த காலம் பற்றிய விவாதங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை விட மகிந்த ராஜபக்ச தனது பிரதிநிதியாகக் கோத்தபாயவை நியமித்திருக்கிறார். அவர் இந்த நாட்டின் முன்னேற்றங்களில் ஆற்றலுடன் செயற்படுவார் என்று நாங்கள் நம்புகின்றோம்.

நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. நாட்டிலுள்ள மக்கள் அன்றாட தேவைகள் குறித்துப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விடயங்களுக்கு ஆற்றலுடன் செயலாற்றக்கூடியவர் கோத்தபாய ராஜபக்சவும் அவரது கட்சியினருமே என்று கருதி ஆதரவளிக்கின்றோம்.

தமிழர் ஏமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

பல பாதகமான விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சி செய்துள்ளது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணைபோயுள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டும். அரச அதிகாரத்தில் மாற்றம் வேண்டும். அதற்கான மாற்றத்தை அடுத்து வரவிருக்கும் அரசதலைவர் தேர்தலில் தொடக்கி வைக்க வேண்டும். கோத்தபாயவின் கடந்த காலம் அப்படியே இருக்கட்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியை நம்பினால் தொடர்ந்தும் ஏமாளிகளாக இருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை நம்பச் சொல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மக்களை ஏமாற்றி வருகிறது.

கோத்தபாய ஆட்சிக்கு வந்தவுடன் முதலாவது நடவடிக்கையாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகத் தெரிவித்துள்ளார். படையினர் வசமுள்ள தனியார் காணிகள் உடனடியாக மக்களிடம் கையளிக்கப்படும். அவசியமான இராணுவ முகாம்கள், அரச காணிகளுக்கு மாற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

**காணாமலாக்கப்பட்டோர் எவருமில்லை**

காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் இல்லை என்பது போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் உட்பட அனைவருக்கும் தெரியும். அவர்களுக்கான இழப்பீட்டை சீராக வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பன்னாட்டு விசாரணை என்று எதுவும் நடக்கப்போவதில்லை. அதனை இந்தியா உள்ளிட்ட எந்த நாடும் விரும்பாது. ஒரு நாட்டின் மீது பிற நாடுகள் தலையிடுவதையோ, ஒரு நாட்டின் இராணுவத்துக்கு எதிராகச்செயற்படுவதையோ எந்த அரசும் அனுமதிக்காது - என்று மேலும் தெரிவித்தார். (த-110)

# ஆரோக்கியமான அதிகாரப்போட்டியே ரணில்– சஜித்இடையில்நிலவுகின்றது!

## சொல்கிறார் சுனில் டி சில்வா

கொழும்பு, செப். 6

தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இருப்பது ஆரோக்கியமான அதிகாரப் போட்டி. இந்த போட்டித் தன்மையே கட்சியின் வெற்றியாகும். அதேபோன்று சபாநாயகர் கருஜயசூரியவும் சளைத்தவர் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினரும் தேசிய சேவை சங்கத்தின் பிரதித் தலைவருமான சுனில் டி சில்வா.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவின் அரசியல் பின்னணியே பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் அடையாளம். 1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரணதுங்க அரச தலைவர் முறைமையை நீக்குவதாக அறிவித்தது முதல் அதன் பின்னர் வந்த அரச தலைவர் வேட்பாளர்களும் அரச தலைவர்களும் அதே வாக்குறுதிகளை மக்களிடம் முன்வைத்து வந்தார்கள். ஆனால், அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதும் அதனை எவரும் நிறைவேற்றவில்லை. அதற்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை. அதேபோன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு தேர்தலின் போது அரச தலைவர் முறையை நீக்குவதாக மதுளுவாவே சோபித தேரரின் முன்னிலையில் சத்தியம் செய்தார். அதற்கமைவாகவே இலட்சக்கணக்கான மக்கள் அவருக்கு வாக்கு வழங்கினார்கள். இருப்பினும் அன்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப் படவில்லை. இது மக்களுக்கு செய்யும் பாதகமாகும்.

கடந்த காலங்களில் ஐக்கியதேசியக்கட்சியில்டிஎஸ். சேனநாயக்கவுக்கும் பண்டாரநாயக்கவுக்கும் இடையில் முரண்பாடு இருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும், ரணசிங்க பிரேமதாசவுக்கும் இடையில் முரண்பாடு இருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்று கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் சஜித் பிரேமதாச வுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இது அதிகாரப் போட்டியே தவிர தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. இந்த அதிகாரப் போராட்டமே எங்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் - என்றார். (ம-71)

## விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, செப். 6

புத்தளம்- ஹுணவட்டுன பகுதியில் உந்துருளியுடன் இரு டிப்பர்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் வெல்லவாய வீதியில் ஹுணவட்டுன பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஹுணவட்டுன பகுதியை நோக்கி சென்ற உந்துருளி எதிர்த்திசையில் வந்த டிப்பருடன் நேருக்கு நேர் மோதியதில் உந்துருளியின் ஓட்டுநர் வீதியில் விழுந்துள்ளார். கீழே விழுந்து குறித்த நபர் மீது பிறிதொரு டிப்பர் வாகனமும் மோதியதாலேயே அந்த நபர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (ம)

# கொழும்பு தாமரைக்கோபுர வணிகச்செயற்பாடு ஆரம்பம்

கொழும்பு, செப். 6

கொழும்பு, தாமரைக்கோபுர கட்டடத் தொகுதிக்காக உத்தேச வணிகமய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தாமரைக்கோபுர திட்டம் முழுமைப்படுத்தப்பட்டு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தில் துணைநலன்களை இலங்கை மக்கள் அனுபவிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதைப்போன்று இதனை வணிகச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்காக விரைவில் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# தனது தீர்மானங்களினால் தோற்கக்கூடாது ஐ.தே.க!

## வேட்பாளர் தெரிவு தொடர்பில் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, செப். 6

அரச தலைவர் தேர்தலில் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பெயரை அனைத்து மக்களும் உச்சரித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிசெய்துள்ளனர். இந்த நிலையில் தனது முரணான தீர்மானங்களால் அந்தக் கட்சி தோல்வியடையக்கூடாது என்று தெரிவித்தார் அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன்.

சப்ரகமுவவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் சூடுபிடித்துள்ள விடயம்தான் அரச தலைவர் தேர்தல். இந்தத் தேர்தலுக்கு மக்கள் விடுதலை முன்னணி தனது வேட்பாளர் யார் என்று உறுதியாகச் சொல்லியுள்ளது. பொதுமக்கள் முன்னணி கோத்தபாயவை அறிவித்துள்ளது. சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை அனைத்து மக்களும் உச்சரிக்கத் தொடங்கியுள்ளனர். இவ்வாறிருக்கையில் தனது தீர்மானங்களால் ஐ.தே.க தோல்வியடையக்கூடாது - என்றார். (ம)

# அரச செலவு தொடர்பாக வருகின்றது சுற்றறிக்கை

கொழும்பு, செப். 6

அரச செலவு முகாமைத்துவம் தொடர்பாக திருத்தங்களை உள்ளடக்கி புதிதாகத் தயாரிக்கப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோரது தனிப்பட்ட அலுவலக ஊழியர் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய வரையறைகளை அறிவித்து, அரச தலைவர் செயலகத்தால் 2010ஆம் ஆண்டு அரச செலவு முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் உரிய திருத்தங்கள் மற்றும் புதிய விடயங்களை உள்ளடக்கி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்த புதிய சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ம-61)

# கலாசார நிதியப் பங்கீடும் தமிழர்களுக்கு வேண்டும்!

## அமைச்சர் சஜித் மீது நம்பிக்கையுண்டு என்று தெரிவித்தார் சிறிநேசன் எம்.பி.



கொழும்பு, செப். 6

அமைச்சர் சஜித் பிரேமதாச தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் வீடமைப்புத் திட்டத்தில் காட்டுகின்ற செயற்பாட்டை கலாசார நிதியத்திலும் காட்ட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிநேசன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது நாடு பல்லின மக்கள் வாழும் நாடு என்பதால் பல கலாசாரங்களை பின்பற்றக்கூடியவர்கள் இருக்கின்றனர். அதனால் நாட்டில் இருக்கும் முக்கிய நான்கு மதங்களின் கலாசார அமைப்புக்களுக்கும் மத்திய கலாசார நிதியத்தின் நிதி பகிரப்படவேண்டும்.

கடந்த காலங்களில் அவ்வாறான நடவடிக்கைகளைக் காணக்கூடியதாக இருக்கவில்லை.

அத்துடன் பல கலாசாரங்களை பின்பற்றும் எமது நாட்டில் ஒருசாரால் மற்றுமொரு இனத்தவரின் கலாசாரம் அவமதிக்கப்படும் பட்சத்தில்தான் இன, மத பிரச்சினைகள் இன நல்லிணக்கத்துக்கான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலமைகளை கடந்த காலங்களில் எமது நாட்டில் நாங்கள் கண்டிருக்கின்றோம். அவ்வாறான நிலமை எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலும் கலாசாரத்துக்கு பொறுப்பான அமைச்சர் சஜித் பிரேமதாச தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை இருக்கின்றது. அவரின் செயற்பாடுகளில் தவறு இருக்குமானால் அதனை திருத்திச் செயற்படக்கூடியவராக இருக்கின்றார்.

அதேபோன்று வீடமைப்பு விடயத்தில் எமது மக்கள் திருப்தியுடன் இருக்கின்றனர்.

அதேபோன்று கலாசாரம் சம்பந்தமான விடயங்களிலும் தமிழ் மக்கள் திருப்தியடையும் வகையில் செயற்படுவார் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும் எதிர்காலத்தில் நாட்டில் தலைமைப்பதவி வகிக்கும் திறமை இருக்கும் சஜித் பிரேமதாச புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பெரும்பாலான அரசியல்வாதிகள் இந்த இனப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டே தங்களின் அரசியலை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார்.

(ம-31)

---

### நபரொருவரின் தகவல்களை தருமாறு கோரிக்கை

கொழும்பு, செப். 6

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குத் தொழில் நிமித்தம் சென்றிருந்த தம்பிமுத்து சாந்தகுமாரன் என்னும் நபர் தொடர்பில் இது வரையில் எத்தகைய தகவல்களும் கிடைக்காத நிலையில் அவர் தொடர்பிலான தகவல்களைத் தந்துதவுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்கள் உதவியை நாடியுள்ளது.

இந்த நபர் கடந்த 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குத் தொழில் நிமித்தம் சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் தொடர்பிலான தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக் கப்பெறவில்லை. இதையடுத்தே மேற்படி கோரிக்கை விடுக்கப் பட்டு ள்ளது. (ம-71)

---

### ஆசிய, பசுபிக் வலயம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் இலங்கையில்

கொழும்பு, செப். 6

ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தில் இந்த வருடத்துக்கான ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி தொடர்பான மத்திய நிலையத்தின் செயற்பாட்டு பேரவை மற்றும் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் ஒக்ரோபர் 8 மற்றும் 9ஆம் திகதிகளிலும் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதியிலும் இலங்கையில் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைவாக விவசாயம் கிராமிய பொருளாதார அலுவல்கள் நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீர் வள அபிவிருத்தி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தக் கூட்டத்துக்கான மதிப்பீடு செலவு அமைச்சரவையால் கவனத்தில் கொள்ளப் பட்டுள்ளது.

(ம-61)

---



### சந்தேகநபர்களை கைது செய்வதற்கு உதவுமாறு கோரிக்கை

கொழும்பு. செப். 6

கொச்சிக்கடை மற்றும் பிலியந்தலை பகுதிகளில் இடம்பெற்றதாக கூறப்படும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ள பொலிஸார் அவர்களைக் கைது செய்வதற்காக பொதுமக்களிடம் உதவிக்கோரியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 30ஆம் திகதி கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுவகொட்டுவ பகுதியில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. சந்தேக நபர்களை மறைகாணிகளின் மூலம் அடையாளம் கண்டுள்ள பொலிஸார், அவர்களைக் கைது செய்வதற்காக பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

(ம-71)

---

## தம்புள்ளவில் சுற்றிவளைப்பு ஹெரோய்னுடன் பலர் கைது

கொழும்பு, செப். 6

தம்புள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது ஹெரோய்னுடன் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்புள்ள நகரத்தை அண்டிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

சந்தேகநபர்கள் தம்புள்ளை நகரத்தை அண்டிய பகுதிகளில் பேருந்துகளில் கப்பம் பெற்றுள்ளதாகவும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் தம்புள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-71)

---

## பாதாளத்தில் விழும் விதமான சவால்களை சந்தித்துள்ளோம்

### அரச தலைவர் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 6



தற்போது நாடு முகங்கொடுத்துள்ள அரசியல், பொருளாதார, சமூக சவால்களை நோக்கும்போது மிக குறுகிய காலத்துக்குள் எவரும் எதிர்பார்க்காத மாபெரும் பாதாளத்தில் நாடு விழுந்துவிடும் என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் - அவர். (ம)

---

## சிறுமி மீது துர்நடத்தை; ஒருவருக்கு மறியல்

கல்முனை, செப். 6

வீதியில் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவியை அழைத்து பாலியல் துர்நடத்தை புரிந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை துர்நடத்தை இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் இரு நாள்கள் அட்டாளைச்சேனைப் பகுதியில் தலைமறைவாகியிருந்த வேளை கல்முனைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவர் கைதானார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)



---




### ஸஹ்ரானுக்கு வாகனம் வழங்கினரா?

## சந்தேகத்தில் மறியலிலிருந்த இருவரையும் மன்று விடுவித்தது

கல்முனை, செப். 6

ஸஹ்ரான் குழுவினருக்கு வாடகைக்கு வான் வழங்கிய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவித்த நீதிமன்று, ஏதாவது அழைப்பாணை விடுக்கப்பட்டால் மன்றில் முற்பட வேண்டும் என்றும் கல்முனை நீதிமன்று தெரிவித்தது.

இந்த வழக்கு கல்முனை நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

தென்னிலங்கைப் பகுதியில் வெள்ளை உடுப்புகள் கொள்வனவு செய்வதற்கென்று பயங்கரவாதிகள் ஏப்ரல் 21க்கு முன்னர் வாடகைக்கு வாகனம் ஒன்றைப் பெற்றுப் பயன்படுத்தியிருந்தனர். அந்த வாகனத்தை வழங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த யூட், தனுசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தனுசனின் பெயரிலிருந்த குறித்த வாகனத்தை யூட் மூலமாகப் பயங்கரவாதிகள் வாடகைக்குப் பெற்றிருந்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான என்.சிவரஞ்சித், தெய்வநாயகம் மதிவதன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (த)

# காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 29ஆவது நினைவேந்தல் நேற்று

## வந்தாறுமூலை வளாகத்தில் கண்ணீர்மல்க நடந்தது

செங்கலடி, செப். 6

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்தவேளை இராணுவத்தினரால் விசாரணைக்கு என்று அழைத்துச்சென்று காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் வந்தாறுமூலை வளாக முன்றிலில் நேற்று நடைபெற்றது.





வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மட்டக்களப்பு உறவுகள் இதை ஏற்பாடு செய்திருந்தனர்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் பொலிஸ், இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படை முகாம்கள் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டன. மோதல் தீவிரமடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி நாலாபுறமும் இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் நுழைந்த இராணுவத்தினர் சில நாள்களில் அந்த மாவட்டத்தில் தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சமடைந்திருந்தனர். அந்த இடங்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல்கள் நடத்தினர். விசாரணைக்கென்று அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பலர் காணாமலாக்கப்பட்டிருந்தனர். 29 வருடங்கள் கடந்தும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற வினாவுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இழந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட தலையாட்டி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இன்றுவரை அவர்கள் பற்றிய தகவலில்லை.

இராணுவ சீருடையில் காணப்பட்ட தலையாட்டி நபர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம்களாகவும் இருக்கலாம் என்ற சந்தேகமும் அவர்களிடம் காணப்படுகிறது.

இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்குப் பல்கலைக் கழக அகதி முகாம் அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் அழுகைக் குரல்களையே கேட்க முடிந்தது. அங்கு நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அவர்களைத் தேடிச் செல்ல முடியாதவாறு உறவினர்களும் முகாமுக்குள் முடிங்கிக் கிடந்தனர் என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர். இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதானக் குழு பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்திருந்தது. எந்தப்பயனுமில்லை. (கு)

### மருதங்கேணிக்கு பதில் பிரதேச செயலர்

வடமராட்சி, செப். 6

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலர் நியமிக்கப்படும் வரை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறீ பதில் பிரதேச செயலராக் கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5.173)

### சந்நிதியானில் கலை நிகழ்வுகள்

வடமராட்சி,செப். 6

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 8ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவன் த.ஜெனுசனின் பேச்சும், இதே பாடசாலை மாணவர்களின் பக்திப்பாடல்களும் இடம்பெறும். நாளை சனிக்கிழமை வல்வெட்டித்துறை சிறிமுத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஜனையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெறவுள்ளது. அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் இவை நடைபெறுகின்றன. ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் தினமும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-173)

### சொற்பொழிவு

வடமராட்சி, செப். 6

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்வசத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் மு.ப 10 மணியளவில் நடைபெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஈழத்தில் முருக வழிபாடு என்னும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் ஆ.சிவநாதனின் சொற்பொழிவு இடம்பெறும்.

நாளை 7ஆம் திகதி சனிக்கிழமை 'பாடும் பணியே பணி' என்னும் தலைப்பில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசனும் நாளை மறுதினம் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 'பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்' என்னும் தலைப்பில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் சொற்பொழிவு ஆற்றுவார்கள். (ஒ.5.173)



### மகனை தேடிய தந்தை சாவு

முல்லைத்தீவு, செப். 6


காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான நாகராசா நகுலேஸ்வரன் என்பவரைத் தேடி வந்த ஏழாம் வட்டாரம், சிவநகர், புதுகுடியிருப்பைச் சேர்ந்த சின்னையா நாகராசா என்ற தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தமது உறவுகளைத் தேடி காணாமலாக்கப்பட்ட உறவுகள் போராட்டத்தை ஆரம்பித்து 900 நாள்கள் கடந்துள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 17 பெற்றோர்கள் உயிரிழந்துள்ளனர். வடக்கு - கிழக்கில் 54 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். (ஒ.5)




### கடும் காற்றால் விபத்து

மன்னார், செப். 6



கடும் காற்றுக் காரணமாக மன்னார் பெரிய பாலத்துக்கு அருகில் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த முதியவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகினார்.

இந்த விபத்து நேற்று மாலை 5 மணிக்கு இடம் பெற்றது. மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய முதியவரை ஏற்றி வந்த முச்சக்கர வண்டி மன்னார் பெரிய பாலத்தை கடந்து வங்காலை நோக்கி வந்து கொண்டிருந்தபொழுது பலத்த காற்று காரணமாக கட்டுப்பாட்டை இழந்து வீதியோர நடுகல்லில் மோதியது. பயணம் செய்த சாரதி மற்றும் முதியவர் பள்ளத்தில் தூக்கி வீசப்பட்டனர்.

முச்சக்கர வண்டி பள்ளத்தில் விழாமையால் இருவரும் அதிர்ஷ்டவசமாக சிறிய காயங்களுடன் தப்பினர். (ஒ.5.213)

# வடக்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வீதம் அதிகரிக்கப்படும்

## ஆளுநர் ராகவன் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

மூன்று சதவீதமாகவுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வீதம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் 6 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

"எம் மத்தியில் வாழும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளும் வாய்ப்புக்களும்" என்ற தலைப்பில் யாழ். பொது நூலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஐந்தாவது வடக்கு வட்டமேசை கலந்துரையாடலில் மாற்றுத்திறனாளிகள் சந்திக்கும் சவால்கள் அவர்களது தேவைகள் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதன்போது ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டமேசை கலந்துரையாடலில் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மாற்றுத்திறனாளிகள் சந்திக்கும் சவால்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைத்தார். இதன்போது அவர்களுக்கான சில தீர்வுகள் கலந்துரையாடலின் போதே ஆளுநரால் வழங்கப்பட்டது. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்து வசதிகளும் அவர்களது தேவைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்களை திணைக்கள தலைவர்களுக்கு வழங்கவுள்ளதாக ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ.5)

குண்டுதாரிகளின்

# அலைபேசித் தரவுகளை மீட்டெடுத்தது எவ்.பி.ஐ.

## சி.ஐ.டி. அறிக்கை

கொழும்பு, செப். 6

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரிகளால் பயன்படுத்தப்பட்ட ஐந்து அலைபேசிகளின் உள்ளகத் தரவுகள் அமெரிக்காவின் எவ்.பி.ஐ. புலனாய்வாளர்களால் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் நேற்றுமுன்தினம் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் சமர்ப்பித்த 'பி' அறிக்கையில் இந்த தகவல் இடம் பெற்றுள்ளது.

குண்டுதாரிகளால் பயன்படுத்தப்பட்ட ஐந்து அலைபேசிகள் அமெரிக்காவுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு, எவ்.பி.ஐ. அதிகாரிகளால் அவற்றின் உள்ளக தரவுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கைப் புலனாய்வு முகவர் அமைப்புகளிடம் போதிய வசதிகள் இல்லாததால், மேலதிக விசாரணைகளுக்காக அலைபேசிகள் எவ்.பி.ஐ.யிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

எவ்.பி.ஐ. அதிகாரிகள் வெடிபொருள்கள், கைரேகை ஆய்வு, மரபணு ஆய்வு, அலைபேசி ஆய்வுகள் போன்ற விசாரணைகளில் நிபுணத்துவ உதவிகளை வழங்கி வருகின்றனர். தாம் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பாக சாட்சியம் அளிப்பதற்கும் எவ்.பி.ஐ. அதிகாரிகள் விருப்பம் வெளியிட்டுள்ளனர் - என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ.5)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 115 பேருக்கு விளக்கமறியல் 178 பேர் தடுப்புக் காவலில்

## 100 வங்கிக் கணக்குகளும் முடக்கம் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, செப். 6

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் இதுவரையில் 293 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 115 பேர் விளக்கமறியலிலும், 178 பேர் தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 41 சந்தேகநபர்களின் 100 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் 293 பேர் இதுவரையில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலிலும் தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

62 சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வு பிரிவாலும், பயங்கரவாத விசாரணைப் பிரிவால் 47 பேரும், கொழும்பு குற்றப் பிரிவால் 41 பேரும், 16 பேர் அம்பாறை பொலிஸ் பிரிவிலும், 4 பேர் கல்கிஸ்சை பொலிஸ் பிரிவிலும், கொழும்பு தெற்கு பிரிவில் 4 சந்தேகநபர் களும், 3 பேர் நுகேகொட பகுதியிலும் மற்றும் கண்டியில் ஒருவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

41 சந்தேகநபர்களுக்கு சொந்தமான 100 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. 134 மில்லியன் ரூபா பணத் தொகை தொடர்பிலான செயற்பாடுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடமிருந்து 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத் தொகையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். பயங்கரவாதிகளுக்குச் சொந்தமான 6 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துகள் தொடர்பில் தகவல்களை திரட்டி யுள்ள குற்றப் புலனாய்வு பிரிவினர் அவற்றை முடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களின்போது தற்கொலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் காயமடைந்த 81 பேரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது. காயமடைந்ததாகக் கூறப்படும் மேலும் 7 பேரிடம் வாக்குமூலங்களை பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளதாகவும், இவ்வாறு வாக்குமூலங்களை வழங்காமல் இருப்பவர்கள் 0112392900 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு வாக்குமூலங்களை வழங்க முடியும் - என்றார். (ஓ.5.71)

# குட்டையில் மிதக்கும் அதிசயக் கல்!!!



கொழும்பு, செப். 6

பதுளை, மீகஹகிவுல தல்தென சிறி போதிராஜாராம விகாரைக்கு அருகில் அமைந்துள்ள பதுலு ஓயாவில் சுமார் இரண்டு கிலோ நிறையுடைய அதிசய கல் நீரில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல் மீகஹகிவுல தல்தென சிறி போதிராஜாராம விகாரை அருகிலுள்ள குட்டையில் போடப்பட்ட போதே மிதந்துள்ளது.

இந்த விசித்திர கல்லை பார்ப்பதற்காக நேற்றுக் காலை முதல் பெருந்திரளான மக்கள் விகாரையை நோக்கி படையெடுத்துள்ளனர். இந்தக் கல் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க தயார் என தல்தென சிறி போதிராஜாராம விகாரையின் விகாராதிபதி வண. தல்தென தம்மவங்ச தெரிவித்துள்ளார். (ஓ.5)

# அமெரிக்கர்கள் கொண்டு வந்த 6 பைகளில் என்ன இருந்தது?

## சர்ச்சையை கிளப்புகிறார் விமல் வீரவன்ச எம்.பி.

கொழும்பு, செப். 6

கொழும்பு ஹில்டன் விடுதியில் ஆறு பைகளுடன் வந்த அமெரிக்கர்கள் அதனைச் சோதனையிட அனுமதிக்கவில்லை என்றும், அமெரிக்கத் தூதரக வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்ட அந்தப் பொதிகளில் என்ன இருந்தது என்று கேள்வி எழுப்பியுள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.


கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் 30ஆம் திகதி, அமெரிக்க வானூர்தியில் வந்த ஆறு அமெரிக்கர்கள், ஹில்டன் விடுதியில் தங்கச் சென்றனர். அவர்கள் கொண்டு சென்ற ஆறு பைகளையும், விடுதியின் பாதுகாவலர்கள் சோதனையிட முனைந்தனர். அதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சிறிது நேரத்துக்குப் பின்னர், அமெரிக்க தூதரகத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று விடுதிக்கு வந்து அந்தப் பைகளை எடுத்துச் சென்றது.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இந்த பைகள் ஆய்வு செய்யப்படவில்லையா? அவற்றில் சந்தேகத்துக்கிடமான அல்லது மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருள்களால், ஸ்கானர்களின் மூலம் பைகளைச் சோதனையிட அவர்கள் அனுமதிக்கவில்லையா? என்பதே எமது கேள்வி.

அமெரிக்கர்கள் வழக்கமாக நாட்டுக்கு வருவதால் பைகளில் என்ன கொண்டு வருகிறார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் குறித்து அரசு மக்களுக்கு கூற வேண்டும் - என்றார். (ஓ.5)



## துர்க்கை அம்மனின் திருமஞ்ச சில்லு இறுகியது

யாழ்ப்பாணம், செப். 6

தெல்லிப்பழை துர்க்கையம்மனின் திருமஞ்ச சில்லு இறுகியமையால் அசைய மறுத்தது. ஜே.சி.பி. கொண்டு அசைக்க முயற்சித்தும் மஞ்சத்தை அசைக்க முடியவில்லை. இறுதியாக அம்மன் மஞ்சத்தில் இருந்து இறக்கப்பட்டு அடியவர்கள் தோளில் சுமந்து சென்றார்கள்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இடம்பெற்று வருகின்றது. நேற்றைய தினம் மாலை திருமஞ்சம் இடம்பெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் அம்மன் வீதி உலா வந்தார். மேற்கு வீதியில் மஞ்சம் சென்று கொண்டிருந்த போது சில்லு இறுகியது. இதனால் மஞ்சத்தை இழுக்க முடியவில்லை. ஜே.சி.பி. கொண்டு வரப்பட்டு மஞ்சத்தை அசைக்க முயன்றபோதும் முடியவில்லை. இறுதியில் மஞ்சத்திலிருந்து அம்மன் இறக்கப்பட்டு, பக்தர்களின் தோளில் சுமந்து கொண்டு செல்லப்பட்டார். (ஒ,5)

## 'நாடாளுமன்ற கறுப்புதினம்' எதிர்க்கட்சிகள் அறிவிப்பு

கொழும்பு, செப். 6

ஆளும் தரப்பினரிடம் கேட்க எந்தவொரு கேள்விக்கும் பதில் தெரிவிக்காது நிராகரிக்கப்பட்ட 'நாடாளுமன்ற கறுப்பு தினமாக' நேற்றைய நாள் மாறியுள்ளது. எமது கேள்விகளை புறக்கணித்து ஆளும் தரப்பு செயற்படுவது எமது சிறப்புரிமையை மீறும் செயல் என்று எதிர்க்கட்சிகள் சபையில் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.

நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்து விட்டு சகல தேர்தல்களையும் முடித்து விட்டு புதிய அரசை உருவாக்க இடமளிக்க வேண்டும் எனவும் சபையில் சிலர் வலியுறுத்தினர்.

நாடாளுமன்ற அமர்வுகளில் வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் போது எதிர்க்கட்சி தரப்பினரிடம் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில்சொல்வது வழக்கமானதும் கட்டயமான ஒன்றாகும். எனினும் எதிர்க்கட்சி தரப்பில் 15 கேள்விகள் நேற்று எழுப்பப்பட்டிருந்த போதிலும் கூட எந்தவொரு கேள்விக்கும் பதில் தெரிவிக்க ஆளும் தரப்பின் அமைச்சர்கள் எவரும் வருகை தந்திருக்கவில்லை. இதனை அடுத்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர். அமர்வில் பெரும்பாலான ஆளும்கட்சி உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை.

இதேவேளை, ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரின. இருப்பினும் வாக்கெடுப்பை நடத்தத் தயாரில்லை என்று ஆளும் தரப்பில் ஒருசிலரும் கடும் வாத பிரதிவாதத்தில் ஈடுபட்டனர்

ஆளும் தரப்பில் பெரும்பான்மை இல்லாத நிலையில் நீண்ட நேர மோதலின் பின்னர் சபாநாயகரின் தலையீட்டால் வாக்கெடுப்பை நடத்தாது அரசு தப்பித்தது.

'சட்டவரைவு குறித்து இன்னொரு நாளில் விவாதத்துக்கு எடுத்து வாக்கெடுப்பும் நடத்தும் அதிகாரம் சபை முதல்வருக்கு உள்ளது. அதற்கமைய இன்னொரு நாளில் இந்த விவாதம் முன்னெடுக்கப்படும்' என்று சபாநாயகர் தெரிவித்து சபையை ஒத்தி வைத்தார். (ஒ,5)



## பலாலி அபிவிருத்திப்பணி அமைச்சர் குழு பார்வை

யாழ்ப்பாணம், செப். 6

பலாலி வானூர்தித் தளம் 3 கட்டமாக அபிவிருத்தி செய்யப்படும். தற்போது 2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமும், 40 மீற்றர் அகல மும் கொண்ட ஓடு பாதை அமைக்கப்பட்டு வருகின்றது. அடுத்த மாதம் 15ஆம் திகதியிலிருந்து வெளிநாடுகளுக்கான வானூர்திச் சேவைகள் இங்கிருந்து ஆரம்பமாகும். இவ்வாறு சிவில் வானூர்திச் சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பலாலி வானூர்தித் தளம் பன்னாட்டு வானூர்தித் தளமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இதற்கான அடிக்கல் கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி நடுகை செய்யப்பட்டிருந்தது. அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுவதாக கொழும்பில் தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்திப்பணிகளை, சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் ரணதுங்க தலைமையிலான குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். அதன் முன்னேற்றங்கள் குறித்து நேரடியாக ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் வானூர்திச் சேவைகள் பணிப்பாளர் தெரிவித்ததாவது:

பலாவி வானூர்தி நிலையத்தில் முதல் கட்ட அபிவிருத்திப் பணிகள் விரைவில் நிறைவுக்குவரும். இதன்பின்னர் 80 இற்கும் குறைவான ஆசனங்களை உடைய வானூர்திகள் சேவையில் ஈடுபடும். இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளின் பின்னர் 150 ஆசனங்களையுடைய வானூர்திகள் பறப்பில் ஈடுபடும். 3 ஆம் கட்ட அபிவிருத்தியின் பின்னர் பன்னாடுகளுக்கான முழுமையான வானூர்திச் சேவை நடைபெறும். வானூர்தித் தரிப்பிடம், பயணிகள் தங்குமிடம், வானூர்திக் கட்டுப்பாட்டுக் கோபுரம், தீயணைப்பு நிலையம் ஆகியவற்றுடன் பன்னாட்டு வானூர்தி நிலையங்களை அத்தாட்சிப்படுத்தும் பாதுகாப்பு நிலையம், குடிவரவு -குடியகல்வு திணைக்களம் என்பனவும் அமையப்பெறும்- என்றார். (ஒ,5,105)

### முப்படையினரும்...

சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக நிறுத்தக் கோரி குருநாகலில் மிகப் பெரிய பேரணி நேற்று நடத்தப்பட்டது. போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திகள் சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்கவால் சத்தியவாதி மைதானத்தில் இது நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் சஜித் பிரேமதாசவின் ஒளிப் படத்துடனான பதாதைகளை ஏந்தியவாறு 'அடுத்த அரச தலைவர் சஜித் பிரேமதாச' என்று கோசம் எழுப்பினர். இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தனது தந்தை ரணசிங்க பிரேமதாச குருநாகலில் இருந்தே 'கம் உதாவ' திட்டத்தை ஆரம்பித்ததாகவும் குருநாகல் மாவட்டத்தின் நன்றியுள்ள மக்கள் அந்த இன்பமான கடந்த காலத்தை ஒருபோதும் மறக்க மாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும், இந்த நாட்டை பலப்படுத்தும் பெரிய அபிவிருத்தி புரட்சியை ஏற்படுத்துவதாக தனது உரையின் போது அவர் வாக்குறுதியளித்தார். ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைவரினதும் ஆசியைப் பெற்றுக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நாட்டுக்கும் உயிர் தியாகம் செய்த ரணசிங்க பிரேமதாசவின் மகனுக்கு நாட்டைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும் என்று தான் நம்புவதாக சஜித் பிரேதமாச மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், தமது ஆட்சி அமைந்ததும் இராணுவத்தினருக்கான உதவிகள் சரியாக வழங்கப்படும் என்றும் கூறினார்.

'30 ஆண்டு காலப் போரை முடித்து வெற்றி வாகை சூடிய இராணுவத்தினரை துப்புரவுத் தொழிலாளர்களாக்கி மதிப்பிறக்கம் செய்யமாட்டேன். அவர்கள் சுயாதீனத்துடன் செயற்பட இடமளிப்பேன். நான் குடும்ப ஆட்சியை முன்னெடுக்க மாட்டேன். ஆனால் ஒரு தரப்பினர் குடும்ப ஆட்சியை நிலைநிறுத்த இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் கடந்த காலங்களில் நாட்டை வெளிநாட்டவர்களுக்கு விற்று தமது கணக்குகளை நிரப்பிக் கொண்டனர். எதிர்காலத்திலும் அதனையே செய்ய முற்படுகின்றனர். சிலர் விகாரைகளுக்குச் சென்று கூக்குரல் இடுகின்றனர். ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கின்றனர். பௌத்தத்தை பாதுகாக்கவில்லை என்று கூறுகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களில் ஒரு தூபியையாவது கட்டிக் கொடுத்தார்களா? எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் ஆயிரத்து 125 பௌத்த வாரத்தை நான் நடத்தி பௌத்தத்தை பாதுகாப்பேன்' என்றார் சஜித்.

இந்தக் கூட்டத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி பெரேரா, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜே.சி.அலவத்துவல, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் நளின் பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான துசார இந்துநில், இந்திக பண்டாரநாயக்க ஆகியோர் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட தொகுதி அமைப்பாளர்கள், பிரதேச மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். எனினும் பதுளை மற்றும் மாத்தளையில் இதேபோன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் கலந்து கொண்டிருந்த முக்கிய உறுப்பினர்களான அமைச்சர் மங்கள சமரவீர, ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் பங்கேற்கவில்லை. (ஒ,5,31)

### வேலை...

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது பலாலி வானூர்தித் தளத்தில் அமையவுள்ள 'டியூட்டி பிறீ சொப்' களில் உள்ளூர் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்படும். இதற்குரிய வகை யில் இங்குள்ளவர்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலும், பலாலி வானூர்தி நிலையம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அதிகளவானோர் அங்கு பணிபுரிய வேண்டிய தேவை உள்ளது. அதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதே போன்று வடக்கில் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் - என்றார். (ஒ,5)

### குண்டுதாரிகளை...

கிறது என்று பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:கோத்தபாய ராஜபக்ச வின் கடவுச்சீட்டு தொடர்பான பொய்யான குற்றச்சாட்டுகள் குறித்து குற்ற விசாரணைத் திணைக்களம் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் கவனம் செலுத்தவில்லை. முன்னைய அரசின் உறுப்பினர்களை பழிவாங்குவதிலேயே அரசு தீவிரமாக உள்ளது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் நாட்டில் அமைதி நிலவியது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் அந்த அமைதி குலைந்து போய் விட்டது. அரசில் உள்ள யாருமே இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்கத் தயாரில்லை. ஒருவர் மீது மற்றவர் கைகாட்டிதப்பிக்கொள்ள முனைகின்றனர் -என்றார். (ஒ,5)

## விபத்தைக் குறைப்பதற்குப் புதிய உத்தி முப்பரிமாணத்தில் மஞ்சள் கடவைகள்!



அபுதாபி,செப்.6
முப்பரிமாணத் தோற்றத்திலான பாதசாரிகள் கடவைகளை ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த முப்பரிமாணக் கோடுகள் சாரதிகளின் கண்களுக்கு வீதியில் தடை இருப்பது போன்ற மாயையை உருவாக்கும். இதனால், அவர்கள் வேகத்தைக் குறைப்பார்கள். வீதி விபத்துகளும் குறையும் என்று இதுகுறித்து அந்த நாட்டுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

*ஈரானின் கப்பல் விவகாரம்*

## கப்பலின் உரிமையாளருடன் பேரம் பேசுகிறது அமெரிக்கா

லண்டன்.செப்.6
பிரிட்டனால் விடுவிக்கப்பட்ட ஈரானின் எண்ணெய்க் கப்பலின் தலைவருக்கு அமெரிக்கா, பல கோடி டொலர்களை இலஞ்சமாகக் கொடுத்து அந்தக் கப்பலைத் தங்களிடம் கையளிக்குமாறு கேட்டுள்ளது. இதை அமெரிக்க அரச திணைக்களம் உறுதி செய்துள்ளதாக வெள்ளை மாளிகை ஊடகங்கள் தெரிவித்தன. குறிப்பிட்ட இந்த எண்ணெய்க் கப்பலின் தலைவரான இந்தியாவைச் சேர்ந்த குமார் என்பவருக்கு அனுப்பியுள்ள மின் அஞ்சலில் 'நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தியை அனுப்புகிறேன். உங்களுக்குக் கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தயாராக இருக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது உங்கள் கப்பலை நாங்கள் கைப்பற்றுவதற்கு வசதியான ஒரு பகுதிக்குச் செலுத்துவது மட்டுமே. இது ஏமாற்று வேலை இல்லை என்பதை நீங்கள் உறுதி செய்துக் கொள்ள அமெரிக்க தேசிய திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்தை அனுப்பியுள்ளேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை உறுதி செய்துள்ள வெள்ளை மாளிகை ஊடகங்கள் அந்தக் கப்பலின் தலைவர் இந்த மின்னஞ்சலை அசட்டை செய்துள்ளார் என்றும் அதன் காரணமாக அமெரிக்கா தனிப்பட்ட ரீதியில் கப்பல் தலைவருக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்தக் கப்பலையும் கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது என்றும் தெரிவித்தன.

# இந்தியாவில் வெடித்துச் சிதறியது பட்டாசு தொழிற்சாலை!

*பஞ்சாபில் சம்பவம்; 23பேர் சாவு!*



புதுடெல்லி,செப்.6
இந்தியாவின் பஞ்சாப்பிலுள்ள குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பட்டாலா எனும் இடத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலையில் வெடிச் சம்பவம் ஏற்பட்டது. இந்த வெடிச்சம்பவத்தில் 23 பேர் சாவடைந்தனர்.

அத்தோடு இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். இந்த வெடிப்புச் சம்பவம் காரணமாகக் குறித்த தொழிற்சாலைக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது. அந்த இடிபாடுகளுக்குள் பல தொழிலாளர்கள் சிக்கியுள்ளதாகவும், இதனால் சாவுகள் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. இந்தியாவின் தேசிய பேரிடர் மீட்பு குழுவினரும், உள்ளூர் நிர்வாகமும் இணைந்து குறித்த பகுதியில் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலை குடியிருப்புப் பகுதிகளுக்கு மத்தியில் அமைந்து இருக்கின்றது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகப் பட்டாலா அரச மருத்துவமனை மருத்துவர் ஹர்பால் சிங் தெரிவித்தார், படுகாயம் அடைந்த 4 பேர் மேலதிக சிகிச்சைக்காக அருகிலுள்ள மிர்தசரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 73வயதுத் தாய்க்கு இரட்டைக் குழந்தைகள்!

இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் 73 வயதுத் தாய் ஒருவருக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. இது அங்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அறுவைச் சிகிச்சை மூலம் எரமாட்டி மங்காயம்மாஎன்றபெண்னே இவ்வாறு இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தார். ஐ.வி.எவ்' எனப்படும் சோதனைக் குழாய்க் கருத்தரித்தல் முறை மூலமே இந்தக் கருத்தரிப்பு நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் தலிபான்கள் தாக்குதல் 5 பேர் சாவு; 25 பேருக்குக் காயம்

காபூல்,செப்.6
ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 5 பேர் சாவடைந்தனர். 25 பேர் காயமடைந்தனர். காபூல் நகரிலுள்ள ஷாஷ்தரக் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது. அங்கு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இந்தத் தாக்குதலுக்குத் தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. கடந்த திங்கட்கிழமை கிழக்கு காபூல் குடியிருப்புப் பகுதியில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 16 பேர் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
ஆப்கானின் அரசுக்கு எதிராக நீண்டகாலமாகப் போர் புரிகின்றனர் தலிபான்கள். ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க படைகளைத் திரும்பப் பெறுவது தொடர்பாகத் தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சு நடத்தி வருகிறது.
இந்தப் பேச்சு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இது ஒருபுறமிருக்க ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்களும் நடந்த வண்ணம் உள்ளன.

*ஹொங்கொங் விவகாரம்*

## தொடர் போராட்டங்களின் எதிரொலி திரும்பப் பெறப்பட்டது தீர்மானம்

ஹொங்கொங்,செப்.6
ஹொங்கொங்கின் கைதிகளைச் சீனாவுக்கு நாடு கடத்தும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹொங்கொங்கில் போராட்டங்கள் நடந்து வந்த நிலையில், அந்தத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. ஹொங்கொங் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரவும், அமைதியை நிலை நாட்டவும் கைதிகளைச் சீனாவுக்கு நாடு கடத்தும் சட்டத் திருத்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுவதாகக் ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகி கேரி லொம் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

**பின்னணி**
ஹொங்கொங்கின் குற்றவாளிகளைச் சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையைச் சந்திக்க வைக்க ஏதுவாகக் கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.
இந்தத் தீர்மானத்தை எதிர்த்துக் ஹொங்கொங் மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வலுத்து வந்தது. இதையடுத்து சீன இராணுவத்தின் படைப்பிரிவுகள் ஹொங்கொங்கில் குவிக்கப்பட்டன. ஆனால், போராட்டங்களைத் தடுக்க முடியவில்லை. இந்த நிலையில் இந்தப் போராட்டத்தின் எதிரொலியாகத் தற்போது அந்தத் தீர்மானம் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




வெனிசுலாவின் தலைநகர் கராகஸில் நடந்த அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றின்போது பெண் ஒருவர், அடக்கு முறையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியைத் திட்டித் தீர்த்த காட்சி இது.

'பிரெக்ஸிட்' விவகாரம்

# போரிஸ் ஜோன்சனின் முயற்சி தோல்வி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிரடி!

## பதவி நீக்கப்படுவீர்கள் என்று அரசு எச்சரிக்கை விடுப்பு!




லண்டன்,செப்.6

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஒப்பந்தம் ஏதும் இல்லாமல் பிரிட்டன் வெளியேறுவதைத் தடுப்பதற்குத் தேவையான சட்டத்தைப் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குப் பிரிட்டன் அரசு எடுத்த முயற்சியைக் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தோற்கடித்தனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதைத் தாமதப்படுத்தக் கோரும் இந்தத் தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றில் நடந்த வாக்கெடுப்பில், அதற்கு ஆதரவாக 328 வாக்குகளும், எதிராக 301 வாக்குகளும் பதிவாகின. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த 21 உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசின் இந்த முயற்சியைத் தோற்கடித்தனர். இந்த வாக்கெடுப்புக்குப் பிறகு, அரசின் உத்தரவை மீறி அரசுக்கு எதிராக வாக்களித்தவர்கள் கட்சியை விட்டு நீக்கப்படுவர் என்று பிரிட்டனின் அரசதரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகிறபோது, ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் பிரிட்டன் வெளியேறுமேயானால், அது அரசியல் தற்கொலையாக அமையும் என்று கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜெர்மி ஹண்ட் எச்சரித்திருந்தார்.

'பிரெக்ஸி... கால அவகாசம் முடிவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில் செப்ரெம்பர் மாதத்தில் பிரிட்டன் நாடாளுமன்றம் கூடியதும் சில நாள்களிலேயே அதன் அமர்வுகள் இடைநிறுத்தி வைக்கப்படும் என்று கடந்த வாரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பஹாமஸ் தீவுகளைத் தாக்கியது டொரியன் புயல். அது குறித்த ஒளிப்படங்களின் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ். அங்கு புயல் புரட்டிப்போட்ட கட்டடம் ஒன்றின் நிலை இது.

## போரிஸ் ஜோன்சனின் சகோதரர் அமைச்சரவையிலிருந்து விலகல்!

லண்டன்,செப்.6

பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சனின் அமைச்சரவையில் அங்கம் வகித்து வந்த அவரது சகோதரர் ஜோ பதவி விலகினார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஒப்பந்தம் இல்லாமல் பிரிட்டனை வெளியேற்றுவதற்குப் பிரிட்டன் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் எடுத்த முயற்சியை அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோற்கடித்த நிலையிலேயே போரிஸ் ஜோன்சனின் சகோதரர் ஜோ, அமைச்சரையில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதுகுறித்து அவர் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

கடந்த சில வாரங்களாகக் குடும்ப விசுவாசம் நாட்டு நலன் என்பவற்றுக்கு இடையே சிக்கித் தவித்து வந்தேன். இது தீர்க்க முடியாத பிரச்சினை. எனவே. மற்றவர்கள் எனது அமைச்சுப் பதவியை வகிப்பதற்கான நேரம் இது - எனப் பதிவிட்டுள்ளார்.



## பஹாமஸில் சாவுகள் அதிகரிப்பு!

டொரியன் புயலின் தாக்கம் காரணமாகப் பஹாமஸ் தீவில் 20 பேர் சாவடைந்தனர். பஹாமாஸ் மற்றும் அபகோ தீவுகளை டொரியன் புயல் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கியது. இதில் பெரும் சேதம் பஹாமாஸ் தீவுக்கு ஏற்பட்டது. புயல் தாக்குதலால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே டொரியன் புயலுக்கு இதுவரை பஹாமஸில் 20 பேர் சாவடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்தப் புயல் ஏற்படுத்திய பேரழிவு காரணமாக 70ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

## அமெ.வுடன் பேச்சில்லை

ஈரான் தெரிவிப்பு

ஈரான்-அமெரிக்கா நாடுகளுக்கிடையே இருதரப்பு பேச்சுக்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று ஈரான் அதிபர் ஹீசன் ரவுகானி தெரிவித்தார். ஈரானின் நாடாளுமன்றத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தற்போது ஐரோப்பிய நாடுகளுடன் நடைபெற்றுவரும் பேச்சுக்கள் பலனளிக்காமல் போனால் அணு ஆயுத ஒப்பந்தத்தில் ஈரான் தனது உறுதிப்பாட்டைச் சில நாட்களுக்குள் குறைத்துக்கொள்ளும் என்றும் அவர் அந்த உரையில் மேலும் தெரிவித்தார்.


# யுரேனியம் தயாரிப்பதை அதிகப்படுத்துகிறது ஈரான்!

தெஹ்ரான்,செப்.6

செறிவூட்டப்பட்ட யுரேனியத் தயாரிப்பை விரைவுபடுத்துவதற்கான செயற்றிட்டங்களை உருவாக்குவதற்கு ஆரம்பித்திருப்பதாக ஈரான் அதிபர் ஹீசன் ரவுகானி தெரிவித்தார். உலக நாடுகளுக்கிடையே நடைமுறையில் உள்ள அணு ஆராய்ச்சி, அணுச் சோதனை குறித்த அனைத்து எல்லைகளையும் ஈரான் நீக்க இருக்கிறது. 2015ஆம் ஆண்டு அணு ஒப்பந்த உடன்படிக்கைகளை மீறியதிலிருந்து ஈரான் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

ஹீசன் ரவுகானி ஈரானின் அரச தொலைக்காட்சி ஒன்றில் பேசியபோது, "அணுசக்தி ஆராய்ச்சித் துறையின் முன்னேற்றத்துக்காக அவர்கள் (ஈரானின் அணு ஆராய்ச்சியாளர்கள்) வேண்டியதைச்செய்யலாம். எனவே இது தொடர்பாக உள்ள ஒப்பந்தத்தைக் கைவிடுவதற்கு முடிவு செய்திருக்கிறோம்' என்றார். கடந்த ஆண்டு அணு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறிய அமெரிக்கா, ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதித்தது. ஆனால், அமைதியான சூழலுக்கான நோக்கத்திலேயே அணுத் திட்டத்தைச் செயற்படுத்துவதாக ஈரான் கூறி வருகிறது. இதனால் அமெரிக்கா-ஈரான் இடையே முறுகல் தொடர்கிறது.

இந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.6
யாழ்.கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - - - -

யாழ்ப்பாணம்,செப்.6
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - - - -

யாழ்ப்பாணம்,செப்.6
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.6
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்திய 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 'ஏ' பிரிவினருக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் இடம்பெற்றது. இதில் முதலிரு செற் ஆட்டங்களை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:16, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாவது செற் ஆட்டத்தை புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. நான்காவது செற் ஆட்டத்தை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்டநேர முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (23)

- - - - - - - - - - - - - - -

யாழ்ப்பாணம், செப்.6
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் 8:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (23)



எல்லே தொடரில் முதன் முறையாக

## யாழ். பல்கலை அணி வெண்கலம் வென்றது

யாழ்ப்பாணம், செப்.6
இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முதன்முறையாக வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தறை விக்வெல மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ரஜரட்டை பல்கலைக்கழக அணி மோதியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழ அணி 30 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றது. 5 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரஜரட்டை பல்கலைக்கழக அணி 30 பந்துகளில் 2 ஓட்டங்கள் மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது. (23)



5, 10 ஆயிரம் ஓட்டப் போட்டிகளில்

## நிசோபனுக்கு வெண்கலம்

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம்,10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட கனகராசா நிசோபன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
இளநிலைப் பிரிவினருக்கான 57ஆவது தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது. வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட கனகராசா நிசோபன் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் 16 நிமிடம் 26 செக்கனிலும், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் 36 நிமிடம் 18 செக்கன் 26 வினாடியிலும் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (23)

## வேக நடைப் போட்டியில் தனுசியாவுக்கு வெள்ளி



யாழ்ப்பாணம்,செப்.6
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் வேக நடைப் போட்டியில் வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட ஜெயராசா தனுசியா வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
இளநிலைப் பிரிவினருக்கான 57ஆவது தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது. 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் வேக நடைப் போட்டியில் வவுனியா மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட ஜெயராசா தனுசியா 33 நிமிடம் 26 செக்கன் 55 வினாடிகளில் வேக நடையை முடித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். (23)

## தடகளப்போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.6
வடக்கு மாகாண தடகளப்போட்டி நாளை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன் தலைமையில் ஆரம்பநாள் நிகழ்வுகள் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். இறுதிநாள் நிகழ்வுகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்ளவுள்ளார். (23)

கரப்பந்தாட்டப் போட்டியில்

## அச்சுவேலி தோப்பு வாலிபர் வி.க. இறுதியாட்டத்துக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 6
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திய 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக அரையிறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் முதல் மூன்று செற்களை அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி 25:22, 25:13, 25 :22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (23)

ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில்

# றெமின்சன்- துஷாந்தன் இணை தங்கம் வென்றனர்



யாழ்ப்பாணம்,செப்.6

உகலத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையால் நடத்தப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் றெமின்சன்- துஷாந்தன் இணை தங்கப்பதக்கம் வென்றது.

கடந்த வாரம் கிளிநொச்சி உள்ளகரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய றெமின்சன்-துஷாந்தன் இணையை எதிர்த்து மட்டக் களப்பு மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய ரி.குணசீலன்- கே.கிசோக் இணை மோதியது. இதில் முதலிரு செற் ஆட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய றெமின்சன- துஷாந்தன் இணை 21:15,21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது.

(23)

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில்

# தங்கம் வென்றனர் றெமின்சன்-கம்சாயினி




உகலத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையால் நடத்தப்பட்ட வடக்கு -கிழக்கு மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரில் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் றெமின்சன்-கம்சாயினி இணை தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினர்.

கடந்த வாரம் கிளிநொச்சி உள்ளகரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய றெமின்சன்-கம்சாயினி இணையைஎதிர்த்துதிருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய நிலோசன்- எம்.ஆர். எவ். நடா இணை மோதியது. இதில் முதலாவது செற் ஆட்டத்தை திருகோணமலை மாவட்டத்தைப் பிரதி நிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய நிலோசன் - எம்.ஆர்.எவ். நடா இணை 27:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினர். இரண்டாவது,மூன்றாவது செற் ஆட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய றெமின்சன் -கம்சாயினி இணை 21:15,21:17 என்ற புள்ளி கள் அடிப்படையில் கைப்பற்ற இறுதியில் 2:1 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி பங்கு பற்றிய றெமின்சன் -கம்சாயினி இணை வெற்றி பெற்றது. (23)

# ஆப்கான் வீரர் ரஹமத் ஷா சாதனை


ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முதல் சதத்தைப் பெற்ற வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை ரஹமத் ஷா நிகழ்த்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணி பங்காதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்தப் போட்டியின்போதே ரஹ்மத் ஷா ஆப்கானிஸ்தானுக்கு கன்னிச் சதத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

2018ஆம் ஆண்டு முதன்முதலாக டெஸ்ட் அரங்கில் அடியெடுத்து வைத்த ஆப்கானிஸ்தான் அணி தனது முதல் போட்டியில் இந்திய அணியை எதிர்த்தாடியது. அதன் பின்னர் தனது இரண்டாவது போட்டியாக தற்போது பங்களாதேஷ் அணியுடன் ஆப்கானிஸ்தான் விளையாடி வருகின்றது.

பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்தப் போட்டியில் ரஹமத் ஷா அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 187 பந்துகளுக்கு முகம் கொடுத்து 10 நான்கு ஓட்டங்கள் மற்றும் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 102 ஓட்டங்களைப் பெற்று சதம் கடந்தார். இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணியின் சதம் கடந்த முதல் வீரர் என்ற வரலாற்றைப் படைத்தார் ரஹ்மத் ஷா.



# 'பெய்ல்ஸ்' இல்லாமல் இடம்பெற்ற ஆஷஸ்

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நேற்றுமுன்தினம் ஆரம்பமான 4ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் ஒரு கட்டத்தில் ஸ்டம்ப் மீது பெய்ல்ஸ் இல்லாமல் ஆட்டம் இடம்பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான போட்டி முதல் நாள் ஆட்டத்தின் போது இரண்டு தடவைகள் மழையால் பாதிக்கப்பட்டது.

அத்துடன் 32ஆவது பந்துப் பரிமாற்றத்தின் போது பலத்த காற்று வீச ஸ்டம்ப் மீது இருந்த 'பெய்ல்ஸ்' அடிக்கடி கீழே விழுந்தது. இதனால் நடுவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய ஸ்டம்ப் மீது 'பெய்ல்ஸ்' இல்லாமல் சிறிது நேரம் ஆட்டம் இடம்பெற்றது.

பன்னாட்டு கிரிக்கெட் போட்டியில் இவ்வாறு ஸ்ட்ம்ப் மீது 'பெய்ல்ஸ்' இல்லாமல் போட்டி நடந்தேறியமை இது இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

இதற்கு முன்னர் கடந்த 2017ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியிலும், பலத்த காற்று வீச, ஸ்டம்ப் மீது 'பெய்ல்ஸ்' இல்லாமல் போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இது ஐ.சி.சி. விதிமுறைகளுக்கு முரணானது.

சதங்கள் பட்டியலில்

# சச்சினை பின்தள்ளினார் ஆஸி. வீரர் ஸ்டீவ் ஸ்மித்

ஓல்டு டிராபோர்டு டெஸ்டில் சதம் அடித்ததன் மூலம் விரைவாக 26 சதங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் சச்சினை பின்னுக்குத் தள்ளினார் ஸ்டீவ் ஸ்மித்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் ஸ்மித் சதம் அடித்து அசத்தினார்.

லோர்ட்ஸ் டெஸ்டில் ஆர்ச்சர் வீசிய பந்தில் காயம் அடைந்தாலும், முதல் இன்னிங்சில் அரைச்சதம் அடித்தார். எனினும் 3ஆவது டெஸ்டில் போட்டியில் அவர் களம் இறங்கவில்லை. மான்செஸ்டரில் நேற்றுமுன்தினம்ஆரம்பமாகிய 4ஆவது டெஸ்டில் அவர் களமிறங்கினார்.

மழையால் நேற்று 44 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டன. முதல் நாளில் அவர் 60 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். நேற்று 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய அவர் சதம் கடந்து அசத்தினார். இந்த சதத்துடன் பன்னாட்டு டெஸ்ட் போட்டியில் ஸ்மித் 26ஆவது சதம் அடித்தார். மேலும் இந்த ஆஷஸ் தொடரில் நான்கு இன்னிங்சில் விளையாடியுள்ளார். இதில் மூன்று சதங்கள் அடித்துள்ளார்.

டான் பிராட்மேன் 69 இன்னிங்ஸில் 26 சதங்கள் அடித்ததுதான் அதிவேமாக 26 சதங்கள் அடித்த சாதனையாக இருந்து வருகிறது. அதன்பின் சச்சின் 136 இன்னிங்ஸில் அடித்து 2ஆவது இடத்தில் இருந்தார்.

தற்போது ஸ்மித் 121 இன்னிங்சில் 26 சதம் அடித்து சச்சினை பின்னுக்குத் தள்ளியுள்ளார். சுனில் கவாஸ்கர் 144 இன்னிங்சிலும், ஹெய்டன் 145 இன்னிங்சில் 26 சதங்கள் அடித்தவர்கள் பட்டியலில் அடுத்தடுத்து உள்ளனர்.



# பள்ளிமுனை சென்.லூசியா வாகை

யாழ்ப்பாணம், செப்.6

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் பிரிவு 2க்கான கால் பந்தாட்டத் தொடரில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் முத்தரிப்புத் துறை சூசையப்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அணி சார்பில் றாபேட் ,யூலியன், டீனு, ஆகியோர் தலா ஒவ்வோர் கோலைப் பதிவு செய்தனர். (23)

**ஜெற்லைன் பஸ்சேவை**
05.09.2019 தொடக்கம்
திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம். காலை 11.45Am
யாழ்ப்பாணம் இருந்து திருகோணமலை இரவு 10.45Pm
(4 மணித்தியால பிரயாணம்)
ரிக்கேற் விலை - 350/=
முற்பதிவு நிலையம்:- வருணி புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
021 222 2868, 078 883 3302
Free Wifi, Phone Charger, Cool Box, Tv வசதிகள்

**விற்பனையாளர் தேவை**
இலங்கையின்
பிரபல பாதணி நிறுவனத்தின்
யாழ்.கிளைக்கு
விற்பனையாளர் தேவை.
077 232 7058

# மிஸ்பாவை கிண்டலடித்த அக்தர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் மற்றும் தெரிவுக்குழு தலைவர் ஆகிய இரண்டு பதவிகளையும் பெற்றுள்ள மிஸ்பாவை அந்த அணியின் முன்னாள் வீரர் சொய்ப் அக்தர் கிண்டல் அடித்துள்ளார்.

இது குறித்து அக்தர் தெரிவிக்கையில்;

தலைமை பயிற்சியாளர் மற்றும் தெரிவுக்குழுத் தலைவர் என இரண்டு பதவிகளையும் பெற்றுள்ள மிஸ்பாவுக்கு வாழ்த்துக்கள்.

அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக நியமிக்கப்படவில்லை என்றால்தான் நான் ஆச்சரியப்படுவேன். ஹாஹாஹாஹா. இதை நான் விளையாட்டாக சொல்கிறேன். அணித் தலைவராக எப்படி சிறப்பாக செயற்பட்டாரா? அதேபோல் தற்போதும் செயற்படுவார் என்று நம்புகிறேன்- என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**என்ரபிறைஸ் சிறிலங்கா**
இலங்கை தொழில் நிறுவன மூன்றாவது தேசிய கண்காட்சி - யாழ்ப்பாணம்.

செப்ரெம்பர் 07, 08, 09 மற்றும் 10 திகதிகளில் யாழ். முற்றவெளி மைதானத்தில் இலங்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடாத்தப்படவுள்ள மேற்படி கண்காட்சியில் இலங்கை மத்திய வங்கியின் காட்சிக்கூடத்தில் பின்வரும் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- புழக்கத்திற்கான நாணயக்குத்தி விநியோகம்
- வேண்டுமென்றே சேதமாக்கப்பட்ட மற்றும் பழுதடைந்த நாணயத்தாள் மாற்றம்
- ஊழிய சேமலாப நிதியம் தொடர்பான சேவைகள்
- இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனை
- இதர சேவைகள்

பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி,
இலங்கை மத்திய வங்கி.
தொலைபேசி இல.: 021-228-5914

**SLAS Open/Limited**
P. உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் - 13
விசேட விரிவுரை
07.09.2019 சனி
9 am- 5.00 pm
Gk Essay நூல் பெற்றுக்கொள்ளலாம்.
NEC
தொடர்பு: 076 166 1986/ 077 741 7143

**SLAS Open/Limited**
P. உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் - 14
விடய மதிப்பு - V.சிவராஜா
08.09.2019 ஞாயிறு
9 am- 5.00 pm
Gk Essay நூல் பெற்றுக்கொள்ளலாம்.
NEC
076 166 1986/077 741 7143

**SLAS கருத்தரங்கு 9**
சனி-07.09.2019- 9AM
பொது விவேகம்,
பொதுஅறிவு
மற்றும்
உலகளாவிய
போக்குகள்
P. கமல்தாசன்-SLPS
புதிய வகை
வினா. நுட்பங்கள்.
இலகு பயிற்சிகள்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739, 076 166 1986

**போட்டிப்பரீட்சை விஷேட வகுப்பு**
SLAS Open/Limited
சனி, ஞாயிறு
9.00 - 3.30
கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 - 4.00
M.A.Ltd
ஞாயிறு
9.00 - 2.30
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு

**விற்பனைக்கு**
தரமான சீமெந்துக்கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.
076 760 3066, 075 039 1980

SEPTEMBER INTAKE NOW ON
STUDY @ JAFFNA
UGC RECOGNIZED
EMPOWER YOURSELF WITH WORLD CLASS
MASTERS DEGREE
**MBA**
MASTER OF BUSINESS ADMINISTRATION
Duration: 18 months
WHY FOLLOW THE London Met MBA AT ESOFT?
in Association with LONDON METROPOLITAN UNIVERSITY

- UGC Recongised
- Awarded by London Met with full credit transfers
- University approved Lecture panel
- Easy Payment Plans
- Flexible study schedule
- Selective intakes
- Assessments are based purely on practical, real-world assignments
- Multiple entry pathways including advanced entry criteria
- Modern learning environment built to match international standards
- Option of visiting the UK for your graduation
- Opportunity to be a part of the exclusive London Met and ESOFT alumni network

COMMENCEMENT 22ND SEP 2019
CLASS MODE EVERY OTHER SUNDAY
Further Details 077 55 888 95
ESOFT Shaping Lives, Creating Futures
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline: 021-7 572 572
www.esoft.lk
SRI LANKA'S LARGEST PRIVATE SECTOR HIGHER EDUCATION NETWORK

## மரண அறிவித்தல்

### கிளறன்ஸ் இராஜேந்திரன் அன்ரனிப்பிள்ளை (ராஜன்)

(கட்டட படவரைஞர்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன், கொழும்பு என்பவற்றை வசிப்பிடமாகவும் சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாவும் கொண்ட கிளறன்ஸ் இராஜேந்திரன் அன்ரனிப்பிள்ளை 05.09.2019 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் , காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, திரேசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்சோஸ்ரொம் பொன்ராசா, எலிசபெத் தம்பதிகளின் அன்பு மருமகனும் கிளிநெற் அவர்களின் அன்புக்கணவரும் மரியோ கிறிசாந்தன் (லண்டன்), மரினோ றொசாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜான்சி (லண்டன்), சிரோமினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றேச்சல் அவர்களின் அன்புப் பேரனும் ஐடா அவர்களின் (அவுஸ்திரேலியா) அன்புச்சகோதரரும் அன்ரன் யோசவ் அவர்களின் (அவுஸ்திரேலியா) அன்பு மைத்துனரும் சிறில் பெனடிற் (லைடன் ரெக்ஸ்ரைல்), பௌஸ்ரின் ஆகியோரின் சகலனும் யூலியற், காலஞ்சென்ற யோசவ் அன்ரன் மற்றும் பிலிப் ஜெயராஜ், அலிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி), இம்மானுவேல் அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன் திருநெற் (லண்டன்), தரளம், ரதி, ஐரின் விசித்திரா, எல்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக 07.09.2019 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

859/25, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(US Hotel அருகாமை)

தகவல்: குடும்பத்தினர்.
0212212661, 0778934951

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.